# நெடுந்தீவில் ராணுவம் தாக்குதலில் ஈடுபடவில்லை

Registered as a News Paper in Ceylon
விலை சதம் 15 ★ ★

**ஈழநாடு சந்தா**
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

**ஈழநாடு சந்தா**
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 12
இதழ்: 29
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 28 முஹர்ரம் 2 புதன்கிழமை [11-3-70]

## ஆட்சிமன்றத்தில் பிரதமர்

### தீவுப்பகுதி எம். பி. பிரச்னை கிளப்பினுர்

கொழும்பு செவ்.

**நெடுந்தீவில் இராணுவத்தினர் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபடவில்லை, துறைமுகத்தில் நின்ற ஜனக்கூட்டத்தில் ஏற்பட்ட தகராறை அடக்குவதில் பொலிசாருக்கு பெரும் தலையிடியாக இருந்தது. பொலிசாரின் அழைப்பின்பேரில் சென்ற 3 இராணுவ வீரர்கள் நிலைமையை கட்டுப்படுத்துவதில் மட்டுமே ஈடுபட்டனர். நெடுந்தீவில் நடைபெற்ற சம்பவம் சாதாரணமானதே.**

ஆட்சிமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா இவ்வாறுபதிலளித்தார். தீவுப்பகுதி எம். பி. திரு வி. நவரத்தினம் இச் சம்பவம் சம்பந்தமாக உடனடியாக விசாரணை நடத்தும்படி ஆட்சிமன்றத்தில் கோரினுர்.


நெடுந்தீவு சம்பவம் வேண்டுமென்று இராணுவத்தினரால் செய்யப்படவில்லையென்றும் ஜனக் கூட்டத்தைக் கட்டுப்படுத்திய போது ஒருசிலர் கடலுள் தவறி வீழ்ந்திருக்கலாம்என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்

இதுபற்றிபொலிஸ் இன்ஸ்பெக்டா ஜெனரல் வெளியிட்ட அறிக்கைஒன்றையும் பிரதமர் ஆட்சிமன்றத்தில் வாசித்துக் காட்டினுர்,

இராணுவத்தினர் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாக நேரடி சாட்சியம் இல்லைஎன்றும் குறிப்பிட்ட வள்ளத்தில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் இருவர் காணப்பட்டதால் கைது செய்யப்பட்டதாகவும்அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது,

## கச்சதீவு கடல் கொந்தளிப்பு; படகுகள் திரும்பமுடியவில்லை

# யாத்திரிகர்களை ‘கஜபாகு’ ஊர்காவற்றுறை சேர்த்தது



மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம் சாதிபேதமற்ற முறையில் சகலரும் சமத்துவமாக வழிபட அனுமதியளிக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரிப்

## கள்ளக்குடியேற்றக்காரர் என நேற்று மட்டும் 20 பேர் கைது

யாழ்ப்பாணம், புதன்

கச்சதீவிலிருந்து யாத்திரிகர்கள் அனைவரும் இன்று ‘கஜபாகு’ கப்பல்மூலம் ஊர்காவற்றுறை திரும்பினர், கச்சதீவில் தங்கிநின்ற பிரயாணிகளைஏற்றும் படகுகள் கடல்கொந்தளிப்புக்காரணமாக புறப்பட முடியாமல் இருந்த வேளையில் கஜபாகு கச்சதீவில் தவித்துநின்ற யாத்திரிகர்களை ஊர்காவற்றுறைக்கு கொண்டுவந்து சேர்த்தது.

கடல் கொந்தளிப்புக் காரணமாககச்சதீவில்நின்று கொண்டிருந்த ‘மகாலட்சுமி’ என்ற படகும்மீன்பிடி வள்ளங்களும் பிரயாணத்தைநடுக்கடலில்நிறுத்த வேண்டி ஏற்பட்டதாகவும் புயல் கடலில் தத்தளித்த பிரயாணிகளுக்கு கஜ்பாகு விரைந்துசென்று உதவியளித்ததாகவும் கூறப்படுகிறது’ உடனடியாக கஜபாகு ஊர்காவற்றுறைக் கடற்படையினருக்குதகவல் கொடுத்தது. கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் விரைந்துசென்று கஜபாகுவில் இருந்த சுமார்84 பிரயாணிகளை [illegible] காவற்றுறைக்கு [illegible] வந்து சேர்த்தன,

கடற்படைக் கப்பலில் பிரயாணஞ் செய்த நால்வர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

கச்சதீவில் நேற்று அதிகாலை நல்லமழை பெய்ததாகவும் கடல் கொந்தளிப்புக் காரணமாக புறப்பட முடியாமல் தனித்துநின்ற மக்கள் [illegible]ணவின்றி கிடக்க நேரிட்டதாகவும் கடைசியாக வந்த [illegible] இருவர் [illegible] தெரிவித்தார்.

“இந்து நாகரிகம்

சட்ட விரோதக்

## ரஷ்யாவும் முன் வந்துள்ளது

கொழும்பு,செவ்வாய்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் முதல் கட்ட வேலையின்மின்சாரநிர்மாண வேலையை சோவியத் ரஷ்யா 1958-ம்ஆண்டு இலங்கையோடு செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் கீழ் பொறுப்பேற்றுச் செய்ய முன்வந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் 14 கோடி ரூபாவை ரஷ்யா இலங்கைக்குக்கடனுக வழங்கியுள்ளது. இந் நிதியுதவியுடன்இங்குஒறுவலையில்உள்ள உருக்குத்தொழிற்சாலை, களனியினுள்ள ‘ரயர்’ தொழிற்சாலை, கந்தளாய் சீனித் தொழிற்சாலை முதலியன நிறுவப்பட்டன.

ஏற்கனவே 3 நிறுவனங்கள் கேள்விமூலம் மகாவலித் திட்டத்தின் முதல் கட்ட வேலையைக் கோரியுள்ளதால் ரஷ்ய உதவியை இந்த முதல் கட்டத்துக்குப் பெறுவதில் கஷ்டம் ஏற்படுமென இத்திட்டம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரஷ்ய உதவியை திட்டத்தின் பிற்பகுதி வேலைகளுக்குப் பயன்படுத்தலாம் எனவும் இவர் தெரிவிதுள்ளனர். (சி. பி. ஏ)

## நேரடி சாட்சியம் இல்லை’

### பொலிஸ் மா அதிபதி கூறுகிறுர்

நெடுந்தீவில் நடைபெற்றதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் சம்பந்தமாக நேரடிச் சாட்சியங்கள் இல்லையென்றும், தாக்கப்பட்டதாகக் கூறப்படும் நால்வர் மட்டுமே புகார்செய்துள்ளதாகவும் பொலிஸ் மா அதிபதி திரு. அலரிக் அபயகுணவர்தனு இன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மநாநாட்டில் தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபதி மேலும் தெரிவித்ததாவது: கச்சதீவிலிருந்து பிரயாணிகள் அடங்கிய வள்ளம் ஒன்று • நெடுந்தீவுத் துறைக்கு வந்து சேர்ந்தபோது ஜனக்கூட்டம் அதிகமாக இருந்தது. கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸாருக்குப் பெரும் தலையிடியாய் இருந்ததால் மூன்று இராணுவ வீரர்கள் ஸ்தலத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அப்போது இராணுவத்தினரும் பொலிஸாரும் கட்டுப்பாட்டுடன் நடந்து அங்கு அமைதியை நிலைநாட்டினர்.

நமசிவாயம் பசுபதிப்பிள்ளை, பொன்னம்பலம் இராமநாதன், நெடுந்தீவுக் கிராமசேவையாளர், கிராமசபைத் தலைவர் திரு. ரி. அம்பலம் ஆகியோர் தாம் தாக்கப்பட்டதாகப் பொலிஸில் முறையிட்டுள்ளனர். ஆனுல் ‘அதற்கு நேரடிச் சாட்சியம் எதுவுமில்லை’’

வட பகுதிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர் சுந்தரலிங்கம், நெடுந்தீவுச் சம்பவம் சம்பந்தமாகச் சேகரித்துச் சமர்ப்பித்த அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டிருந்தது. திரு. சுந்தரலிங்கம் நேற்று இவ்வறிக்கையை பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியிருந்தார்.

நெடுந்தீவுத் துறையில் அண்மையில் பொலிசார் பொதுமக்களை தாக்கியதாகவும் பெண்கள் சிலரை கடலுள் தள்ளி வீழ்த்தியதாகவும் செய்திவெளியாகியிருந்தது தெரிந்ததே.

— —

யாழ்ப்பாணம், செவ்.

புளியம் பொக்கணை நாகதம்பிரான் கோயில் வருடாந்த பங்குனிஉத்தரவிழாவை இம்மாதம் 22-ம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை ஆலய பரிபாலகர்கள் செய்துவருகின்றனர்.

# மீண்டும் யு.என்.பி. வந்தாலே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம் சாதி பேதமற்ற முறையில் சகலரும் சமத்துவமாக வழிபட அனுமதியளிக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரிப் பகுதியிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த ஹரிஜன பக்தர்கள் அங்கு சென்று சுவாமி தரிசனம் செய்த போது எடுத்த படம்.

பன்றித்தலைச்சி

## கோயில்திறக்கப்பட்டதற்கு சிறுபான்மைத்தமிழர்கள் நன்றி

யாழ்ப்பாணம், புதன் ''மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலைக் கடந்த வருடப் பொங்கல் விழாக் காலத்தில் பூட்டி வைத்ததுபோல், இம்முறையும் பூட்டிவைக்காது, ஒடுக்கப்பட்ட மக்களின் வழிபாட்டுரிமையை மதித்துக் கோவிலைச் சகல மக்களுக்கும் திறந்துவிடும்படி தீண்டாமை வெகுஜன இயக்கத்தின் தென்மராட்சிக் கிளை சில வாரங்களுக்கு முன் ஆலய நிர்வாகிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. அதை ஏற்று, ஆலய நிர்வாகிகள் கோவிலைச் சகல மக்களினதும் வழிபாட்டிற்குத் திறந்துவிட்டமைக்குத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆலயநிர்வாகிகளுக்கும், மற்றும் ஒத்துழைப்புத் தந்த சகல மக்களுக்கும் தனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.''

இவ்வாறு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியொன்றில் தெரிவித்துள்ளது. இதைப் பின்பற்றி ஏனைய கோவில்களையும் வழிபாட்டுக்குத் திறந்துவிடும்படியும் மேற்படி இயக்கம் கேட்டுள்ளது.

**சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் நன்றி**

யாழ்ப்பாணம், புதன் ''பன்றித்தலைச்சி அம்மன் கோவில் கதவுகளைத் திறந்து சகலரையும் வழிபடச் செய்த கோவில் முகாமையாளருக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இந்த ஆலயத்தை வழிபாட்டுக்குத் திறந்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட பெரியோர்களுக்கும், ஏனையோருக்கும் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.''

இவ்வாறு அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் காரியதரிசி திரு. பி. ஜே. அன்ரனி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் சகலருக்கும் திறந்து விடப்பட்டுள்ளதென்ற நற்செய்தியைக் கடந்த 7ந் திகதி வெளியான 'ஈழநாடு' பத்திரிகையின் மூலம் முதன் முதலாக அறிந்துகொண்டதும் மகாசபைத் தலைவர், காரியதரிசி, உறுப்பினர்கள் மேற்படி ஆலய முகாமையாளரை நேரில் சந்தித்துத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டதாகவும், சிறுபான்மை தமிழர் மகாசபை வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

...றுறைக்கு கொண்டுவந்து சேர்த்தது.

கடல் கொந்தளிப்புக் காரணமாக கச்சதீவில் நின்று கொண்டிருந்த 'மகாலட்...

## ''இந்து நாகரிகம் ஒரு பாடமாகிறது''

பருத்தித்துறை, புதன் ''க. பொ. த. (உயர்தர) வகுப்புகளுக்கு இவ்வாண்டு தொடக்கம் ''இந்து நாகரிகம்'' ஒரு பாடமாகக்கணிக்கப்பட்டுள்ளது. இதற்கான பாடவிதானமும், பாடபுத்தகங்களின் பட்டியலும் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இப்பாடம் பல்கலைக்கழகங்களிலும் தொடர்ந்து படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. ''பௌத்த நாகரிகம்'' என ஒரு பாடம் ஏற்கனவே பல்கலைக்கழகப் பரீட்சைகளில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'தமிழரை பிளவு படுத்துகிறது'

வல்வெட்டித்துறை, செவ். ''இந்தியத் தமிழர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டதாலேயே தனிச்சிங்களச் சட்டம் ஆட்சிமன்றத்தில் நிறைவேற வழிபிறந்தது.'' இவ்வாறு புலோலிகிழக்கில் பருத்தித்துறைமுன்னணி நகரசபை உறுப்பினர் சி. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற தமிழரசு ஆலோசனைக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசும்போது பல்கலைக்கழகம் என்ற விடயத்தின் மூலமாகத் தேசிய அரசாங்கம் தமிழரைப்பிளவுபடுத்துகிறது என்றார்.

பருத்தித்துறை எம். பி. க. துரைரத்தினமும் பேசினார்.

...க்குச் சொந்தமான கப்பல்கள் விரைந்துசென்று கஜபாகுவில் இருந்த சுமார் 84 பிரயாணிகளையும் ஊர்காவற்றுறைக்கு கொண்டு ...

...தனித்துநின்ற மக்கள் ...வின்றி கிடக்க நேரிட்டதாகவும் கடைசியாக வந்த யாத்திரிகர்களில் ஒருவர் தெரிவித்தார்.

சட்ட விரோதக்

## குடியேற்றக்காரர் என 20 பேர்கைது

யாழ்ப்பாணம், புதன் கச்சதீவிலிருந்துதிரும்பியவர்களில் 20பேர் நேற்று சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர், இவர்களில் நால்வர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்பதை ஏற்றுக கொண்டனராயினும் 20 பேரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளளர்

கச்சதீவு திருநாள் முடிவடைந்துநேற்று சுமார்500 பேர் குருநகர்துறையை வந்தடைந்தபோதே இரகசிய பொலிசார் இவர்களைகைது செய்து விசாரணை நடாத்தினர், கச்சதீவு திருநாள் 8-ம் திகதி முடிவடைந்ததாயினும் யாத்திரிகர் நேற்று வரைகச்சதீவில் தங்கிநிற்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

''வங்கியாளர்

## பயிற்சித் தேர்வில் சம வாய்ப்பு அளிக்கவும்''

**எஸ். ஜே. வி.**

யாழ்ப்பாணம், புதன் வங்கியாளர் பயிற்சித் தேர்வைத் தமிழிலும் நடத்தச் சம்மதித்தபோதிலும், அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் வங்கியாளர் தேர்வில் வங்கித்துறையில் பணியாற்றும் தமிழ்ஊழியர்கள் தமிழ் மொழிமூலம் தோற்றுதற்கு இசைவாக தக்க ஒழுங்குகளை விரைவில் மேற்கொள்ளுமாறு காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வங்கியாளர் பயிற்சி நிலையத் தலைவரைக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

வங்கியாளர் பயிற்சித் தேர்வைத் தமிழிலும் நடத்துவதற்கு வங்கியாளர் பயிற்சி நிலையத்தலைவர் சம்மதம் தெரிவித்து திரு. செல்வநாயகத்திற்கு எழுதியிருந்தார்.

திரு. செல்வநாயகம் எழுதியுள்ளதாவது:

''நான் தொடர்ச்சியாக விடுத்த வேண்டுகோளுக்கமைய வரும் மே மாதம் வங்கியாளர் பயிற்சித் தேர்வை தமிழிலும் நடாத்துவதற்கு நீங்கள் எண்ணம் இட்டிருக்கிறீர்கள்என்பதை 26-2-70-ல் நீங்கள் எனக்கு எழுதிய கடிதம் எடுத்துக் காட்டுகிறது. எனினும் எதுவித இடையூறுமின்றி 'மே' மாதத்தில் தமிழில் தேர்வை வங்கித்துறையில் பணியாற்றும் தமிழ்ஊழியர்கள் எடுக்கத்தக்கமுறையில் விரைவில் ஏற்ற ஒழுங்குகளை உடன் செய்யுமாறு வேண்டுகிறேன்.

தமிழில் தேர்வை எடுக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புக்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தேர்வை எடுக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளிலும் பார்க்க எதுவிதத்திலும் குறைந்ததாயிருக்கக் கூடாது என்பதே என்கவலையாகும்.

காலம் குறுகியதாய் இருப்பதினால் ஏற்ற நடவடிக்கைகளை உடன் எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.''

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 8-ந் திருவிழாவான இன்று மாலை 6 மணியிலிருந்து 7-30 மணிவரை திரு வி. நல்லையா அவர்களின்கதாப்பிரசங்கம் நடைபெறும் இரவு 8-30க்கு மேல் 9-30 மணிவரை இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்,

## மீண்டும் யு.என்.பி. வந்தாலே தமிழருக்கு விமோசனம்

உடுப்பிட்டி, செவ்

ஐக்கியதேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவதன்மூலமே தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க முடியும் என உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் புலோலியில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தால் தமிழினத்தை அழிக்கவே முயல்வார் என்றும் சொன்னார்.

உடுப்பிட்டித் தொகுதியில் நான்காவது கிராமநலசேவாசங்கத்தை புலேலி தெற்கில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

திரு. க. கனகசபாபதி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது: அடுத்த 5 ஆண்டுகளில் எமது உரிமைகளைப் பெறுவிடில் தமிழினம் தாழ்வது நிச்சயம்.

'உடுப்பிட்டித் தொகுதியைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி அபேட்சகருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியினர் கோரிவருகின்றனர். நல்லூர், பருத்தித்துறை, கோப்பாய் முதலிய தொகுதிகளைத் தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்களுக்குவிட்டுக் கொடுக்கத் தயாரானால் நான் உடுப்பிட்டுத் தொகுதியில் போட்டியிடாது தமிழரசு அபேட்சகருக்கு விட்டுக் கொடுப்பேன்.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களிடையே பிளவுகள் இருப்பதைக் காட்டக் கூடாது என்பதற்காகவே நாம் முன்னர் தமிழரசுக்கட்சியினருடன் ஒற்றுமையாக இயங்கி வந்தோம். தமிழ் மக்கள் அடிப்படையான ஒரு சில உரிமைகளைப் பெற வேண்டும் என்றால் நாம் கட்சி பேதம் இன்றி இணைய வேண்டும் என்று திரு ஜீ ஜீ பொன்னம்பலமும் நானும் வற்புறுத்தினோம். நாம் ஒற்றுமைபற்றிக் கேட்ட பொழுது திரு அமிர்தலிங்கம் எம்மைக் கேலி செய்தார்.

நமக்கிடையே ஒற்றுமை இன்மைய ஏற்பட்டால் விளைவுகளைக் கடந்த 5 ஆண்டுகளில் அனுபவிக்க முடிந்தது. நாம் ஒற்றுமையுடன் கோரிக்கை விடுத்திருந்தால் 4 ஆண்டுகளுக்கு முன்னரே பல்கலைக்கழகம் கிடைத்திருக்கும். நாம் ஒற்றுமைப் படுவதற்கு இரு கட்சிகளும் ஒற்றுமைப்படத் தயார் என்று ஜீ. ஜீ. அறிவித்தபொழுது திரு. செல்வநாயகம் ஒற்றுமையென்றால் ஒரு கட்சி முற்றாக அழிய வேண்டும் என்று கூறினார்.

சமஷ்டியா? சுயாட்சியா? என்பது அல்ல இன்றைய பிரச்னை. இந்த நாட்டின் சிறுபான்மை இனமக்களின் உரிமைகளை மீட்பதே இன்றைய பிரச்னையாகும். எமக்கிடையே ஒற்றுமையின்றிப் பிளவுகள் நீடித்தால் எமது உரிமைகளைப் பாதுகாத்துச் சுயமரியாதையுடன் வாழ முடியாது போய்விடும். இந்நிலை ஏற்படுமானால் இன்னும் சில ஆண்டுகளில் தமிழினம் சுவடு தெரியாமல் அழிந்துவிடக் கூடும்.

தமிழ்மக்கள் சிறப்பாக வாழ்வதே 'கல்வி'த் திறமையினால்தான். ஆதலால் கல்வியின்மூலம்தான் நாம் முன்னேற முடியும். திரு. பொன்னம்பலம் அமைச்சராக இருந்தபொழுது 100 கோடி ரூபாவுக்கு மேல் முதலீடு செய்யப்பட்ட 4 தொழிற்சாலைகளைத் தமிழ்ப்பகுதியில் நிறுவினார்.

## மேயருக்குமோட்டார்வாகனம்

யாழ்ப்பாணம்,புதன் 'யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் திரு. ரி. எஸ். துரைராஜாவிற்கு, உத்தியோக பாவிப்புக்காக மாநகரசபையின் செலவில் ஒரு மோட்டார் வாகனம் வாங்க வேண்டும்' என்ற பிரேரணையொன்று இம்மாதம் 18-ம் திகதி நடைபெறவிருக்கும் மாநகர சபை கூட்டத்தில் சமர்ப்பிகப்படவிருக்கிறது.

## சேதுராமன் சகோதரர்கள் யாழ் வருவர்

மானிப்பாய், செவ்வாய் நாதஸ்வர வித்துவான்கள் மதுரை சேதுராமன்சகோதரர்கள் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள் இம் மாதம் 19-ம் திகதி இரவு கரவெட்டி யாக்கரைப் பிள்ளையார் கோவில் திருவிழாவில் இவர்களது கச்சேரி நடைபெறும். தவில் வித்துவான் லயஞானகுபேரபூபதி திரு. வி. தெட்சணாமூர்த்தி தவில் வாசிப்பார் மதுரை சேதுராமன் சகோதரர்கள் 'தில்லானா மோகனாம்பாள்' படத்திற்கு நாதஸ்வரம் வாசித்துள்ளார்கள்.

## 'ஈழநாடு''

### பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் **'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்**என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

**உதவி வழங்கியோர்:**

| | | |
|---|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | ரூபா | 3,737 |
| அன்பளிப்பு, நவஜீவனம், பரந்தன் (காசோலை) | ரூபா | 50-00 |
| நன்மை விரும்பி, சாவகச்சேரி (காசுக்கட்டளை) | '' | 10-00 |
| இரா-கணபதி, டச்சுரோட், மானிப்பாய் (காசுக்கட்டளை) | '' | 3-00 |
| 'லேடன்' தொழிற்சாலை ஊழியர் | '' | 142-50 |

## 'கொள்கைகளை பரப்புவதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறோம்'

### தி.மு.க. செயலாளர் விளக்கம்

அல்லைப்பிட்டி, செவ். ''நாம் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதுஆட்சிமன்ற ஆசனத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணமல்ல. மக்களிடையே எமது கொள்கைகளையும், இலட்சியங்களையும் பரப்பும் நோக்கமாகவே.''

இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகப் புதிய பொதுச் செயலாளர் திரு. பூ. ஆ. விசாகரத்தினம் வேலணையில்நடாத்தப்பட்ட மேற்படி கழக ஆலோசனைக் கூட்டமொன்றில் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. மதிவாணன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. விசாகரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. ''இன்று நமது தமிழ்க்கட்சிகளெல்லாம் தமிழினத்தைஏமாற்றிவிட்டது எமது கழகத்தைப் பூண்டோடு அழிப்பதற்கு இவைகள் போட்டிபோட்டுக் கொண்டு நிற்கின்றது. இவற்றுடன் அரசாங்கமும், பணக்காரர்களும் துப்பறியும் பொலிசாரும் ஒத்துழைப்பு வழங்கிவருகின்றார்கள். இவர்களது எதிர்ப்பை நாம் பொருட்படுத்தாது எமது கழகத்தை வளர்க்க அரும்பாடு படவேண்டும். அதுமட்டுமன்றி தூய உள்ளத்துன் இலட்சியங்களையும் கொள்கைகளையும் பரப்ப வேண்டும்.

எமது கழகத்தின் மூலம் தான் இந்நாட்டுத் தமிழர்களின் பூரண உரிமைகளைப் பெறமுடியுமென்பதில் ஐயமில்லை. உடனடியாக இவற்றை சாதிக்க முடியாவிட்டாலும் காலம் கடந்தாவது இவற்றைத்தீர்க்க முடியுமென்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

மன்னார் உப்புக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு பூசகர் தேவை. இருக்க வீடு வசதியுண்டு. மேற்படி ஆலயத்திற்கு பூசகராக விரும்புவோர் 25-3-70ம் திகதிக்கு முன் நற்சாட்சிப்பத்திரங்களுடனும், இதற்கு முன் பூசை செய்துள்ள ஆலயங்களின் நன்மதிப்புப் பத்திரங்களுடனும் விண்ணப்பம் செய்யவும். மேற்படி ஆலயத்தில் 4-4-70ம் திகதி நேர்முகப் பரீட்சையும் தெரிவும் நடைபெறும். விபரங்களுக்கு கீழ்காணும் நிருவாகஸ்தரிடம் நேரில் அறிந்து கொள்ளலாம். க. கா. வைத்திலிங்கம், மு. நாகலிங்கம், S. சிவலிங்கம், ஆலய நிர்வாகஸ்தர். 1909

### விற்பனைக்கு

ரெக்ஸ்ரையில் தொழிற்சாலைக்கு ரெக்ஸ்ரையில் மாதிரிப் படங்கள்/ ஹான்ட் ஸ்கிரீன் பிறின்ஸ்/ இருட்டறை வேலை/ சாயம்போடுதல் ஆகிய வேலைகளுக்கு அனுபவமுள்ள இரு பாலாரும் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும். இராஜரத்தினம் தொழிற்சாலை, உடையார் வீடு, லோட்டன் ரோட், மானிப்பாய். 1908

### காவலாளர்கள் தேவை

இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அல்லது முன்னர் காவலாளர்களாக அனுபவமுள்ளவர்கள் 16-3-1970ந் திகதி காலை 10 மணிக்கு அத்தாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவேண்டும். வயது நாற்பத்தைந்துக்கு(45)மேற்படாதிருத்தல் வேண்டும்.

பண்டத்தரிப்பு மின்தறி நெசவாலை. 1986

## வியாசப் போட்டி

பருத்தித்துறை, செவ். இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் கல்விப்பகுதியின் உதவியுடன், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் க. பொ. த வகுப்புகளிற் பயிலும் 18 வயதுக்குட்பட்ட மாணவரிடையே ஒரு விவசாயப் போட்டியை நடாத்த முன்வந்துள்ளார். 'காந்தியின் சேவையும் உதாரண வாழ்வும்', 'நவயுகத்தில் மகாத்மா' 'இந்திய-இலங்கைக் கலை, கலாச்சாரத் தொடர்புகள்' "இலங்கை-இந்திய கலாச்சார 'பாரம்பரியங்கள்', 'தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளிடையே பிரதேச ரீதியான ஒத்துழைப்பு' ஆகிய விடயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மொழியிலும் மிகச்சிறந்த வியாசத்திற்கு புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 11—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம்7-03கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி, 10-30 செய்திச் சுருக்கம்.

## வல்வை வைத்தீஸ்வரன் உற்சவம்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

வல்வை வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து இரண்டு வாரம் நடைபெறும் இவ்விழாவில் இம்மாதம் 21-ந் திகதி தேர் விழாவும், 22-ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

## திருநெல்வேலி வெற்றி

மல்லாகம், செவ்.

திருநெல்வேலி சிவன்விளையாட்டுக் கழகத்திற்கும் சுன்ஞகம் ஸ்கந்தவரோதயா விடுதி மாணவர் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்டுக்களால் திருநெல்வேலிக் கோஷ்டி வெற்றியீட்டியது.

தெல்லிப்பழை ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் சுன்ஞகம் ஸ்கந்தவரோதயா விடுதி மாணவர் கழகமும் கலந்து கொண்ட மற்றொரு ஆட்டத்தில் தெல்லிப்பழைக் கோஷ்டியினர் 6 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டினர்.

இருபோட்டிகளும் தெல்லிப்பழை குட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகமென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி அமைப்பின்கீழ் சுன்ஞகத்தில் நடைபெற்றன.

இதே சுற்றுப்போட்டியின் கீழ் தெல்லிப்பழையில், தெல்லிப்பழை ஸ்ரார் விளையாட்டுக்கழமும் திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றிய கிரிக்கெட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

## இவ்வருடம் கேடயம் பெற்றது

கிண்ணியா, செவ்வாய்

திருக்கோணமலையில் இம்மாதம் முதலாம்திகதி நடைபெற்ற திருக்கோணமலைப் பட்டினப் பாடசாலைகளின் உபவட்டார வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் சென். யோசப் தமிழ்ப்பாடசாலை முதலாம் இடத்தை அடைந்து இவ்வருடமும் கேடயத்தைப்பெற்றது.

பெண்கள் நிகழ்ச்சியில் சென். பிரான்சிஸ் சேவியர் தமிழ்ப்பாடசாலை பரிசுக் கிண்ணத்தைப்பெற்றது.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. சபாநாயகம் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கினுர். திருமதி சபாநாயகம் பரிசில்கள் வழங்கினுர்.

ராஜா யாழ்ப்பாணம்
2-30, 6-30, 9-45 மணி


# இன்று யாழ். ஹொக்கிக் கோஷ்டி கொழும்பில்மோதுகின்றது

யாழ்ப்பாணம், புதன்

யாழ். தெரிவு ஹொக்கிக் கோஷ்டி இன்று கொழும்பில். மோதுகின்றது.

விளையாட்டமைச்சின், விளையாட்டு விழாவை முன்னிட்டு கொழும்பில், மாவட்ட தெரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெறும் ஹொக்கிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக, யாழ். தெரிவு ஹொக்கிக் கோஷ்டி நேற்று கொழும்புக்கு பயணமானது. இக் கோஷ்டி இன்று கொழும்பு தெரிவுக் கோஷ்டியுடன் முதலாவது போட்டியில் கலந்து கொள்ளும்.

யாழ். ஹொக்கிக் கோஷ்டி கடந்த இரு மாதங்களாக, கடும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. இக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வீரர்கள் அனேகமானேர், இந்திய ஒலிம்பிக் ஹொக்கிக் கோஷ்டியின் மத்தியஸ்தரான ஜயன்சிங்கிடமும், உலக ஹொக்கி சாம்பியனுன பாகிஸ்தான் கோஷ்டியின் பயிற்சியாளரான ஸகிர் அலியிடமும் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



காப்டன் வி. ரி. சுந்தரலிங்கம்

இம்முறை கொழும்பு சென்றிருக்கும் யாழ். தெரிவு ஹொக்கிக் கோஷ்டிக்கு வீரர் வி. ரி. சுந்தரலிங்கம் தலைமை தாங்குகின்றுர். இவர் சிறுவயதிலிருந்தே ஹொக்கிப் போட்டியில் சிறந்து விழங்குகின்றுர். 1967-ம் ஆண்டிலிருந்து இவர் யாழ். தெரிவுக் கோஷ்டியில் தொடர்ந்து அங்கம் வகிக்கின்றுர். 1967-ம் ஆண்டில் இவர் யாழ். மத்திய கல்லூரியில் 'சிறந்த ஹொக்கி வீரர்' என்ற விருதைப் பெற்றவர்.

யாழ். தெரிவுக் ஹொக்கிக் கோஷ்டியில் இம்முறை அங்கம் வகித்து கொழும்பு சென்றிருக்கும் வீரர்களின் விபரம் வருமாறு: வி. ரி. சுந்தரலிங்கம் (காப்டன்), கே. ஜே. ரஞ்ஜன், சந்திரபோஸ், எஸ். ஹரிஹரன், தர்மச்சந்திரன், கே. மனேகரன், ஈ. சிவக்குமார், ஏ. ஜராட், ஏ. பி. சுர்வாநந்தன், எம். நட்ச்சந்திரம், எஸ். ரட்னராஜா, பி. பாலசுப்பிரமணியம், ரி. தில்லைநாதன், ஏ. விவேகானந்தராஜா. எம். ஜயரட்ணம், ஜே. ரூபன், ஏ. ஆர். பூராஜா.

கொழும்பு சென்றுள்ள யாழ். ஹொக்கிக் கோஷ்டிக்கு, யாழ். ஹொகிச் சங்கத் தலைவர் டாக்டர் துரைசிங்கமும், காரியதரிசி திரு வி ரி. கணேசலிங்கமும் பொறுப்பாளராகச் சென்றுள்ளனர். (தே. நி)

## அஞ்சலி

உடும்பராய் செவ்.

நமது நாட்டிலே பலர் தோன்றி நற்கருமங்களை ஆற்றியுள்ளனர். நற்கருமங்களைச் செய்த நல்லோர்களுள் கண்டி மராமத்திலாகா ஓவசியர் திரு. வி. ரி. செல்வத்துரையும்ஒருவர். கண்டி நகரத்தில் அவர் கலந்து கொள்ளாத எந்தச் சைவப் பணியும் நிறைவேறியதில்லை. பேராதனைப் பல்கலைக்கழகக் குறிஞ்சிக்குமரன் ஆலய நிகழ்ச்சிகளிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் அவர் ஈடுபட்டுழைத்தார். அன்னரது பிரிவு ஈடுசெய்ய முடியாதது என கண்டிமராமத்திலாக ஓவசியராகவும் ஓவசியர் சங்கத் தலைவராகவுமிருந்துபெருந் தொண்டாற்றிய சமூகசேவையாளார் திரு. வி. ரி. செல்வத்துரையின் மறைவையொட்டி நடைபெற்ற இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டு உரையாற்றிய பல்கலைக்கழகத்துச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சு: வித்தியானந்தன் குறிப்பிட்டார்.

உடும்பராயில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்ச்சியின்போது பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம், ஓவசியர் சங்க செயலாளர் திரு. றெட்றிக்கோ, ஆசிரியர் க. இ. சரவணமுத்து திரு. க. அரியரத்தினம் உட்பட பலர் தமது இறுதியஞ்சலியைச் செலுத்தி உரையாற்றினுர்கள்.

## நல்லூர் எம். பி. உறுதி

யாழ்ப்பாணம், புதன்

ஆனைப்பந்தி மெ. மி. தமிழ் கலவன் பாடசாலை குறைபாடுகளைப் போக்கி வசதிகள் வழங்க கல்வி அமைச்சரைச் சந்தித்து நடவடிக்கையெடுப்பதாக நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் வாக்குறுதியளித்துள்ளார் திரு. நாகநாதன் எம். பி. திரு. ஆர். சி மன்மதராயனுடன் இக்கல்லூரிக்கு நேரில் விஜயம்செய்தபோது ஆனைப்பந்தி இந்து வாலிப முன்னணியினரால் வரவேற்கப்பட்டார்

## வட இலங்கை சங்கீத சபை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம். செவ்.

வட இலங்கை சங்கீத சபையின் 1969ம் வருட பரீட்சை முடிவுகளின் தொடர்[illegible]

### கொழும்பு

5-ம் பகுதி- சாதாரண கரசு வாய்ப்பாட்டு.

### தெல்லிப்பழை

வாய்ப்பாட்டு: தனலட்சுமி தேவி முருகேசு, அருந்ததி தேவி இரத்தினசிங்கம் [illegible]லின்.

### பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்கொலை செய்தவரின் சடலம் பொலிஸ் காவலுடன் சென்றது

யாழ்ப்பாணம், புதன்

தற்கொலை செய்து கொண்ட ஒருவரின் சடலம் பொலிஸ் பாதுகாப்புடன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இச் சம்பவம் தாவடியில் நடந்தது.

தாவடியைச் சேர்ந்த கே. நாகலிங்கம் என்பவரின் திடீர் மரணம் குறித்து சுன்ஞகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வீ. செல்லையா ஸ்தல விசாரணை நடாத்திஞர். விசாரணையின் போது இறந்தவரின் மனைவி பிள்ளைகள் சாட்சியமளிக்கையில் சம்பவதினம் காலஞ்சென்றவர் குடிவெறியில் வீட்டுக்கு வந்து தமக்கு அடித்துத் தொல்லைப்படுத்தியதுடன் நச்சுத்திராவகம் குடித்து தாம் சாகப்போவதுடன் உங்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்கப் போவதாகவும் கூறிச் சென்றுர் எனத் தெரிவித்தனர். ஆனுல் இறந்தவரின் தாயார் சம்பவநாள் தனது மகனுக்கு மனைவியும் பிள்ளைகளும் ஏசி அடித்ததுடன் இலங்கைநாயகம் என்பவர் மகனுக்கு நஞ்சு பருக்கியதைக் கண்டதாகவும் விசாரணையின்போது குறிப்பிட்டார்.

இறந்தவரின் பிரேத பரிசோதனையை டாக்டர் வேலும்மயிலும் நடாத்திஞர். இறந்தவர் வயிற்றில் நச்சுத்திராவகம் காணப்படுவதாகத் தெரிவித்த வைத்திய அறிக்கையைத் தொடர்ந்து மல்லாகம் கோவில்பற்று திடீர் மரண விசாரணை அதிகாரி. திரு. இ. பாலசுப்பிரமணியம் இம்மரணம் குறித்து விசாரணை நடாத்தி தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கினுர்.

இறந்தவரின் குடும்பத்தில் எழுந்த தகராறுகாரணமாக பொலிஸ் காவலுடன் இறந்தவர் சடலம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (மல். நிரு)

# செய்திச் சுருக்கம்

### அடையாள வேலை நிறுத்தம்

களனிவேலி கேகாலைப் பகுதியில் ஐ. தொ கா. வை சேர்ந்த சேர்ந்த சுமார் 20 ஆயிரம் தொழிலாளர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமொன்றில் குதிக்கிறுர்கள். அவிசாவளை எல்ஸ்டன் தோட்டத்தில் நடைபெற்று வரும் வேலைநிறுத்தத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இவ் வேலை நிறுத்தம் நடைபெற விருக்கிறது.

0 0 0

### பாதுகாப்பு

வாளைச்சேனை மீன்பிடித் தொழிலாளருக்குப் பாதுகாப்பளிக்கும் விஷயமாக இப்பகுதி மீன்பிடி இலாகா உத்தியோகத்தர்கள் கல்குடா எம். பி. கே. டபிள்யு. தேவநாயகத்தை அண்மையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது மீன்பிடி இலாகாவுடனும் கடற்படை பகுதியினருடனும் தாம் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக அவர் வாக்குறுதியளித்தார்.

0 0 0

### வாடிவீடு

அட்டன் நகருக்கு ஒரு

மாதம் முதல் புத்தளம் பஸ் டிப்போவிற்கு மாற்றம்செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாற்றத்துடன் புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடுகதி பஸ் சேவை ஒன்றும் விடப்படவிருக்கிறது.

0 0 0

### 2 கொத்து அரிசி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தால் மீண்டும் மக்களுக்கு இரண்டுகொத்து அரிசியை வழங்குமென கண்டி செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடைபெற்ற கட்சியின் மாதர் சங்க கூட்டத்தில், எதிர்க்கட்சி தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசும்போது கூறினுர்.

0 0 0

### ஆலய திருப்பணி

திருக்கேதீஸ்சர ஆலயத் திருப்பணிச் சபையினரால் மார்ச் மாதம் 25ம் தேதி சுவாமி அம்பாள் கோயிலை பிரித்து கருங்கல்லில் ஆலயம் எழுப்பும் நோக்கத்துடன் வாலஸ்தாபனஞ் செய்யும் நிகழ்ச்சி இடம்பெறும், அம்பாள் கோயிலுக்கான கருங்கற்கள் பொழிந்துமுடிவடையும் தறுவாயிலுள்ளன.

0 0 0

### குறிக்கோள்

மொழியிலும் மிகச்சிறந்த வியாசத்திற்கு புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்.

...வும், 22-ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. சபாநாயகம் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கினர். திருமதி சபாநாயகம் பரிசில்கள் வழங்கினர்.


ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-45 மணி
போயா, பிறிப்போயா 10-30 மணி
சிவாஜி, ஜி. வரலட்சுமி
எம். என். நம்பியார்
மற்றும் பலர் நடித்த
ஹரிச்சந்திரா

வெற்றிகரமான 77வது தினம்!
ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப் பெண்

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்




சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த

சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானா மோகனாம்பாள்
ஈஸ்ட்மென் கலர்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
அசோகன் - சந்திரகாந்தா
நடித்த
இது சத்தியம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
ஆசைமுகம்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிறிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி — தேவிகா
நடித்த
முரடன் முத்து

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Shirley MacLaine,
Alan Arkin
in
WOMAN TIMES SEVEN
(Adults only)

வெற்றிகாரமான 2வது வாரம்
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Prepoya 4 shows
HELGA
The most revealing Sex education Film ever released
(Strictly for adults only)
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
ஹெல்கா
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
பாஸ்கள்-சலுகைகள் ரத்து

வின்ஸரில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி - டெய்ஸிராணி
நடித்த
யார் பையன்


...இலங்கை சங்கீத சபையின் 1969ம் வருட பரீட்சை முடிவுகளின் தொடர்ச்சி வருமாறு:

### கொழும்பு

5... பகுதி- சாதாரண பிரி... 'எஸ்'

வாய்ப்பாட்டு: சிவகுமாரி இராசையா, நிரஞ்சினி சுப்பிரமணியம், சுபத்திரா சுப்பிரமணியம்,

### திருக்கோணமலை

கமலாதேவி அழகக்கோன் (வாய்ப்பாட்டு) அமிர்தநாயகி அழகக்கோன் (வயலின்)

### யாழ்ப்பாணம்

வாய்ப்பாட்டு: தயாளினி இரத்தினம், ஸ்ரீரஞ்சனாதேவி பத்மநாதன், ஞானமணி வல்லிபுரம் (வயலின்) கிலகராணி அழகரத்தினம் விஜயலட்சுமி சிவகுருநாதர் கிருஷ்ணவேணி மயில்வாகனம்.

### தெல்லிப்பழை

வாய்ப்பாட்டு: சிவானந்தராசா சிற்றம்பலம், சிவஞானராசா சிற்றம்பலம், சிவஞானசேகரம் விஸ்வநாதன், கலாநிதி சுப்பிரமணியம், தேவகி இராசரத்தினம், மங்கையர்கரசி விஸ்வநாதன், கோகிலாம்பாள் விஸ்வநாதஐயர், திலகவதி வேலுப்பிள்ளை (வயலின்) வில்மா வத்சலா செல்வரத்தினம் (வயலின்)

சாதனா பரீட்சையில் மேலதிகமான பாடம் எடுத்துச் சித்தியடைந்தோர்:-

### பருத்தித்துறை

சுசீலாதேவி நடனகுருசாமி வாய்ப்பாட்டு.

### மட்டக்களப்பு

சின்னத்தங்கம் முருகேசு (வயலின்)

ஆசிரியர் பகுதி;-

### கொழும்பு

சாதாரணபிரிவு 'ரி'

ஸ்ரீகாந்தா சச்சிதானந்தம் புல்லாங்குழல்,

### திருக்கோணமலை

ஜெயலக்ஷ்மி சண்முகரெட்ண சர்மா வாய்ப்பாட்டு. இராஜகுமாரி சின்னையாபிள்ளை வயலின்.

### மட்டக்களப்பு

சின்னத்தங்கம் முருகேசு வாய்ப்பாட்டு.

### யாழ்ப்பாணம்

இராஜகுமாரி ஆனந்தநடராசா வாய்ப்பாட்டு. மங்கையர் கரசி திருநாவுக்...

### தெல்லிப்பழை

வாய்ப்பாட்டு: தனலட்சுமிதேவி முருகேசு, அருந்ததிதேவி இரத்தினசிங்கம் வயலின்.

### பருத்தித்துறை

சுசீலாதேவி நடனகுருசாமி (வயலின்).

### சாவகச்சேரி

மகாரஞ்சிதம் பதஞ்சலி (வாய்ப்பாட்டு)

மிருதங்கம்
முதலாம் பகுதி
சாதாரணபிரிவு 'என். எம்.'

ரகுபதி சந்திரா, சண்முகானந்தசர்மா ஜெகன்நாதசர்மா, சிவகுமார் இராசையா, மனோகரதாஸ்பரஞ்சோதி, ஜீவராஜ் ஜீவரத்தினம், ஸ்ரீஸ்கந்தராசா முத்துக்குமாரசாமிக்குருக்கள், சிவகுமரன் சிவசுப்பிரமணியம். அட்சயமூர்த்தி முத்துக்குமாரசாமிகுருக்கள், மகாலிங்கம் சதாசிவம், சச்சிதானந்தன் இராமநாதன், அருணகிரிவாசன் இராமலிங்கம், ஸ்ரீரவிச்செல்வன் துரைராசா, சபேசன் சபாரத்தினம். குலேந்திரன் சின்னையா.

இரண்டாம் பகுதி
சாதாரண பிரிவு 'ஸி. எம்.'
மீனலோசனி வீரசிங்கம், தவராஜா கந்தவனம், பாலச்சந்திரன் பரநிருபசிங்கம், கணேசலிங்கம் கிருஷ்ணசாமி, ஜம்புநாதன் விசுவநாதஐயர்.

மிருதங்கம்
மூன்றும்பகுதி
முதலாம்பிரிவு 'ஓ. எம்.'
பிரணவநாதன் சண்முகரத்தினம்.

சாதாரண பிரிவு 'ஓ. எம்.'
வாசஸ்பதி நமசிவாயம். சிவராசா சின்னையா, விஜயராசா மயில்வாகனம், ஸ்ரீரங்கா அழகக்கோன். ஆத்மானந்தா பொன்னையா, பாலசுந்தரம் துரையப்பா, குகன் யோகரத்தினம்.

மிருதங்கம்
மூன்றும் பகுதி
சாதாரண பிரிவு 'ஓ. எம்.'
பரமேஸ்வரன் கதிரவேலு விவேகானந்தன் கார்த்திகேசு (விசேட சித்தி), முருகையா மாணிக்கம், குமரேசன் பெரியசாமி, சிவபாலன் சபாரத்தினம் (விசேடசித்தி) விக்னேஸ்வரன் சுப்பையாபிள்ளை,

நான்காம்பகுதி
முதலாம் பிரிவு 'எம். எம்'
சிதம்பரநாதன் மாரிமுத்து (விசேட சித்தி).
சாதாரண பிரிவு 'எம் எம்'
செல்வக்குமார் காசிவிசுவநாதன், மணிவாசகன் இரத்தினம் விசேட சித்தி).
ஐந்தாம் பகுதி
சாதாரண பிரிவு 'எஸ் எம்'
ரவிச்சந்திரா மதியாபரணம்.
ஆசிரியர் பகுதி
எவரும் சித்தியடையவில்லை.

(முற்றும்)

...துள்ளார் திரு. நாகநாதன் எம். பி. திரு. ஆர். சிமன்மதராயனுடன் இக்கல்லூரிக்கு நேரில் விஜயம்செய்தபோது ஆனைப்பந்தி இந்துவாலிப முன்னணியினரால் வரவேற்கப்பட்டார்

(மல் நிரு.)

...கொண்டு ஆவன செய்வதாக அவர் வாக்குறுதியளித்தார்.

0 0 0

### வாடிவீடு

அட்டன் நகருக்கு ஒரு வாடிவீடு அவசியமாகத் தேவைப்படுகிறது. இதற்கான காணியை அரசாங்கம் ஒதுக்குவதுடன், அதில் நவீன வாடிவீடு அமைக்க முன்வரவேண்டும். அல்லது இப்பொறுப்பை டிக்ஒயா நகரசபையிடம் ஒப்படைக்க வேண்டும். அட்டன் நகரசபையின் மாதாந்த கூட்டத்தில், 6ம் வட்டார உறுப்பினர் ஜனாப் எம் ஏ எஸ். அபுசாலி மேற்கண்ட பிரேரணையை கொண்டுவர விருக்கிறார்.

0 0 0

### பஸ்சேவை

நீர்கொழும்பு பஸ்டிப்போவினால் நடாத்தப்பட்டுவந்த கொழும்பு அநுராதபுரம் பஸ்சேவைகள் அடுத்த...

...நிகழ்ச்சி இடம்பெறும், அம்பாள் கோயிலுக்கான கருங்கற்கள் பொழிந்துமுடிவடையும் தறுவாயிலுள்ளன.

0 0 0

### குறிக்கோள்

'எமது குறிக்கோள் பல இன மொழி. மத மக்களுக்கிடையே ஐக்கியம் வளர வேண்டுமென்பதேயாகும். நாம் தேசிய அரசாங்கத்தை அமைத்ததே, தேசிய ஒற்றுமையை முன்வைத்தேயாகும், தலவாக்கொல்லை நகரின் பிரதான சந்தியில் தண்ணீர் விநியோகம் அபிவிருத்தி திட்டத்தைஅங்குரார்ப்பணம் செய்துவைத்துவிட்டு பின்பு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு ஆர் பிரேமதாசா சொற்பொழிவாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.


தம்பி அன் கோ
அதிட்ட 1000 ரூபா அல்லது
அதிட்ட 500 ரூபாயில்
சேர்ந்துவிட்டீர்களா?
முழு விபரங்கட்கு
போயாதின 'ஈழநாடு' விளம்பரத்தைப் பார்க்கவும்.



'ஈழநாடு' காரியாலயத்தில்

## விற்பனைக்குள்ள புத்தகங்கள்

| | புத்தகங்கள் [ஆங்கில மொழியில்] | ஆக்கியோன் | விலை |
|---|---|---|---|
| 1 | முதலாவது உலக தமிழ் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதிகள் I & II — | மகாநாட்டில் கலந்துகொண்ட புகழ்பெற்ற பேர் அறிஞர்கள் | ரூபா 250/- |
| 2. | தற்கால தமிழ் இலக்கியத்தில் பெண் — | ஸ்ரீமதி லோகநாயகி நன்னித்தம்பி | ரூபா 12/- |
| 3. | மகாபலிபுரம் பற்றி விளக்கப்படங்களோடு கூடிய நூற்பட்டியல் — | William Willetts | ரூபா 5/- |
| 4. | திராவிடமொழிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய நூற்பட்டியல் — | M. Andronov | ரூபா 5/- |
| 5. | தூரதேசங்களில் தமிழ் படிப்பு — | | ரூபா 15/- |
| | ,, ,, ,, — | (கலிகோ பைண்டிங்) | ரூபா 21/- |
| 6. | மகாத்மாகாந்தி வெள்ளேடு (Album படங்களுடன்) — | ராஜேந்திரபிரசாத் முன்னுரையுடன் | ரூபா 10/- |
| 7. | மகாத்மா காந்தியின் செய்திகள் — | மோகன்ராவ் | ரூபா 1/50 |
| 8. | சிறுவர்கள் ராமாயணம் — | M. பூதலிங்கம் | ரூபா 2/- |
| 9. | காந்தி கதை (வண்ணப்படங்களுடன்) — | | ரூபா 2/50 |

கையிருப்பில் சொற்ப பிரதிகளே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாவோஸில் சண்டையைக் கைவிட பதட்லாவோ விருப்பம்

## கூட்டாட்சி பற்றி பேச்சு நடத்தவும் யோசனை

வியட்யாங், மார்ச் 10

லாவோஸில் உள்நாட்டுக் கலகங்களை நிறுத்திவிடுவதற்கு கம்யூனிஸ்ட் சார்பு பதட்லாவோ இயக்கத்தினர் முன்வந்திருக்கின்றனர்.

உள்நாட்டுக் கலகங்களை நிறுத்திவிட்டு லாவோஸில் எல்லா கட்சிகளையும் கொண்ட கூட்டாட்சிக்கு வழி செய்யும் வகையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு பதட்லாவோ படையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

பதட்லாவோ இயக்கத்தின் தலைவரிடமிருந்து லாவோஸ் பிரதமர் யுவராசர் சுவன்ன பூமாவுக்கு இது சம்பந்தமாக செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

ஆயுதப் போரை நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு பதட்லாவோ இயக்கத்தினர் முன்வந்திருப்பதை பிரதமர் சுவன்னபூமா வரவேற்றிருக்கிறார்.

லண்டனில் வெளிநாட்டமைச்சு அதிகாரிகள் பதட்லாவோ இயக்கத்தினரின் இப்புதிய யோசனையை வரவேற்றுள்ளனர்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அதிகாரி ஒருவர் இது பற்றி கருத்து வெளியிடுகையில் இச்செய்தி மிகவும் சுவராஜ்யமளிப்பதாகவிருக்கிறது என்றார். லாவோஸில் கூட்டாட்சி ஒன்று ஏற்படுவதை அமெரிக்கா வரவேற்றபோதிலும் தென்வியட்னாமில் கூட்டாட்சி ஏற்படுவதை விரும்பாது என்றும் அந்த அதிகாரி கூறியதாகத் தெரிகின்றது பதட்லாவோ இயக்கத்தின் புதிய திட்டத்தைவடவியட்னாமும் வரவேற்றிருக்கின்றது.

லாவோஸில் ஆயுதப் போரை நிறுத்திவிட்டு கூட்டாட்சியொன்றைத் தோற்றுவிப்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவேண்டுமென்று பதட்லாவோ அறிவித்திருப்பது பல நாடுகளில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது

ரொடீஷியாவிலுள்ள

## தூதரகத்தை மூடிவிட அமெரிக்கா முடிவு

நியூயோர்க் மார்ச் 10

ரொடீஷியாவிலுள்ள தனது தூதர் காரியாலயத்தை மூடி விடுவதென்று அமெரிக்கா முடிவு செய்திருக்கின்றது.

ரொடீஷியா தன்னிச்சையாக குடியரசுப்பிரகடனம் செய்து கொண்டதற்கு எதிராகவே அமெரிககா இந்த முடிவை செய்திருக்கின்றது' சாலிஸ்பரியிலுள்ள அமெரிக்க தூதரகம் அடுத்த செவ்வாய்க்கிழமையுடன் மூடப்பட்டுவிடும். அமெரிக்காவின் இந்த முடிவை பிரிட்டன் வரவேற்றிருக்கின்றது.

ரொடீஷியா குடியரசுப் பிரகடனம் செய்து கொண்டதைத் தொடர்ந்து அந்த நாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டுமென பிரிட்டன் எல்லா நாடுகளையும் கேட்டிருந்தது. ரொடீஷியா மீது பொருளாதார நிர்ப்பந்தங்களைச் சுமத்தி தனித்துப் போகச் செய்யவேண்டும்என்று பிரிட்டன் விரும்புகின்றது( அதேசமயம் ரொடீஷியாவின் வெள்ளை ஆட்சிக்கு எதிராகா ராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆபிரிக்க நாடுகள் பிரிட்டனையும் ஐ நா பாதுகாப்பு சபையையும் வற்புறுத்தி வருகின்றன

## பொய்முறைப்பாடு செய்தாராம்

மல்லாகம், செவ்வாய்

வீதியில் வைத்து தனது தங்கச் சங்கிலியை அறுத்து வழிப்பறி செய்ததாக தனது மருமகனுக்கு எதிராக பொய் முறைப்பாடு செய்த பெண்மணி ஒருவர் மீது சுன்னாகம் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்

பொலிஸ் தரப்புவிசாரணை பூர்த்தியானதையடுத்து மேல்விசாரணையை மல்லாகம் நீதிபதி இம்மாதம் 24-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

... ...

## சொந்தக்கட்டிடம் அமைக்கப்படும்

முசலி, செவ்வாய்

நானாட்டான் உபதபால் கந்தோர் கட்டிடம் அமைப்பதற்கு தபால் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது உபதபால் கந்தோர் இருக்கும் கட்டிடம், நானாட்டான் மேற்குக் கிராமச்சபையின்வாடகை வீடாகையால் நிரந்தரமாக ஒரு உப தபால் கந்தோர் கட்டிடம் அமைககப்படவிருக்கிறது.

இதற்கான காணியைத் தெரிவு செய்யும் முயற்சியில் முசலிக் காரியாதிகாரி திரு. வை. சொர்க்கலிங்கம் ஈடுபட்டுள்ளார்கள்.

.........

# சைவ சித்தாந்த தமிழ் ஆய்வு நிலையம்

## நல்லூரில் அமைக்க நாவலர்சபை திட்டம்

யாழ்ப்பாணம், புதன்

தமிழும் சைவமும் வளர்க்கும் பீடமாகவும் அத்துறைகளின் ஆராய்ச்சி நிலையமாகவும் நல்லூர் நாவலர் நிலையத்தை அமைப்பதற்கு நாவலர் சபை திட்டமிட்டுள்ளது இதன் முதல் படியாக ஆய்வு நூலகத்தை முதலில் தொடங்குவதெனச்சபை முடிவு செய்துள்ளது. இதற்கான நிதியைப் பொது மக்களிடமிருந்து பெற நாவலர்சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சபைத்தலைவர் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற நாவலர்சபைக் கூட்டத்தில் நல்லூர் நாவலர் நிலையக்கட்டட வேலைகளின் நிலைமைபற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. மணி மண்டப வேலைகள் முக்கால் வாசி முடிந்துள்ளதாயும் மிகுதி வேலைகளை முடிக்க நிதி போதா திருப்பதாயும் சபையின் பொதுச்செயலாளர் திரு. ம. ஸ்ரீகாந்தா தெரிவித்தார். மணி மண்டப வேலைகளை முடிப்பதுடன் அதில் ஆய்வு நூலகம் ஒன்றினை விரைவில் நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பேராசிரியர் சின்னத்தம்பி தெரிவித்தார்.

வெளியிடங்களிலுள்ள பெரியார்களிடம் நன்கொடையாகவும், கொழும்பில் உதவி நிதி நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்வதன் மூலமும் நாவலர் மணிமண்டப - நூலகப் பணிக்கு நிதி சேகரிப்பதென ஆட்சிக்குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் இம்மாதம் 14-ந் திகதி 'கலைவண்ணம்' என்ற பெயரில் கலைவிழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கலை நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கென உபகுழுவொன்றைச் சபை நியமித்துள்ளது. இக்குழுவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி அதிபர் திரு. கே. எஸ். நடராசா தலைவராகவும் இலங்கை கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஞானலிங்கம், நாடகத்துறையைச் சேர்ந்த திரு. க. பத்மநாதன், நாவலர்சபை உதவிச்செயலாளர்களில் ஒருவரும் சுங்கப்பகுதி விலை மதிப்பீட்டாளருமாகிய திரு. க. க. சுப்பிரமணியம் ஆகியோர் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

விழா அமைப்புகுழுவின் தலைவராக திரு. ம. ஸ்ரீகாந்தா விழா ஏற்பாடுகளின் இணைப்பு அலுவலர்களாக செனட்டர் த. நீதிராசா, மெய்கண்டான் அதிபர் நா. இரத்தினசபாபதி ஆகியோரும் பணி புரிகின்றனர்.

விழாவை வெற்றிகரமாக நடாத்துவதற்கு கொழும்பிலுள்ள தொழிலதிபர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், அரசாங்க அதிகாரிகள், தமிழ்ப் பெரியார்கள், கல்லூரி அதிபர்கள் உட்பட அநேகர் முன்வந்துள்ளனர்.

# அணு ஆயுத தடை ஒப்பந்தம் அமுலுக்கு வந்துவிட்டது

லண்டன், மார்ச் 10

அணுவாயுதங்கள் பரவுவதை தடைசெய்யும் நோக்கம்கொண்ட சர்வதேச ஒப்பந்தம் ஒன்று இப்பொழுது அமுலுக்குவந்துவிட்டது. கடந்த வியாழக்கிழமை இவ்வொப்பந்த அமுலைக் குறிக்கும் வைபவம் ஒன்று லண்டனில்நடைபெற்றது.

கடந்த பல வருடங்களாக ஐ நா. சபையிலும், ஜெனீவா அணுவாயுத பரிகரணமகாநாட்டிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து செய்துகொள்ளப்பட்ட இந்த அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் சுமார் 100 நாடுகள்வரை கைச்சாத்திட்டிருக்கின்றன.

## இறை வணக்கப் பாடல்

சென்னை, மார்ச் 10

தமிழ்நாடு அரசின் விழாக்களில் இறைவணக்கமாக பேராசிரியர் சுந்தரம்பிள்ளை எழுதிய தமிழ்பாடல்பாடப்படும். இதை முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கிறார். மனோன்மணியம் நூலில் வரும் 'நீராரும் கடலுடுத்த நிலமடந்தை' யென்று வரும் பாடல்இறை வணக்கப் பாடலாகப் பாடப்படும்.

— —

## செக். தூதர் யாழ். வருகிறார்

## பத்துப்பேர் பிடிபட்டனர்

நிக்கோஸியா, மார்ச். 10

சைப்பிரஸ் ஜனாதிபதி ஆர்ச்பிஷப்மக்காரியோசைக் கொலைசெய்ய எத்தனித்ததற்காக 10 கிரேக்க சைப்பிரியட்டுகள் கைது செய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை மேலும் எட்டுநாட்களுக்கு காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

......

## சமயகுரவருக்கு பாராட்டு

ஊர்காவற்றுறை, செவ்.

பாஷையூர் பங்குக் குரவ

## அழகான இலங்கைத்தீவுக்கு வருவதில் யு. எஸ். தூதர்மகிழ்ச்சி

வாஷிங்டன், மார்ச்.10

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் அமெரிக்கத் தூதராக நியமிக்கப்பட்டபேராசிரியர் டாக்டர் ரோபர்ட் ஸ்ட்ரோஸ் ஹூப்பே வாஷிங்டனிலுள்ள ராஜாங்க அமைச்சில் நடைபெற்ற விழாவில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். ராஜாங்க உதவி அமைச்சர் எலியட் எல் ரிச்சார்ட்சன் புதியதூதருக்கான பதவி ஏற்புச் சடங்கை நடாத்தி வைத்தார்.

பதவி ஏற்பு வைபவம் நடைபெற்ற போது பேசிய ராஜாங்க உதவி அமைச்சரான திரு. ரிர்சார்ட்சன், "இலங்கைக்கும் அமெரிக்க நாட்டுக்கும் இடையில் இருக்கும் நல்லெண்ணத்தையும் நட்பையும் பேணிக் காக்க புதிய தூதர் பாடுபடுவார் என்று நினைக்கிறேன்'' என்றார். அவர் தொடர்ந்து பேசும்போது. "இலங்கை நாடு உலகிலுள்ள அழகான நாடுகளில் ஒன்று என்று கேள்விப்பட்டுள்ளேன். அந்நாட்டில்டாக்டர்ஸ்ட்ரோஸ் ஹூப்பே பணியாற்றுவார் என்பதில் ஐயமில்லை'' என்றார்.

டாக்டர் ஹூப்பே பதிலளிக்கையில், "என்னுடைய நாட்டின் பிரதிநிதியாக அழகான தீவான இலங்கைக்குச் சென்று அந்தநாட்டு மக்கள் மத்தியில் வாழ்ந்து சேவை செய்யும் பேறு எனக்குக் கிடைப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்'' என்றார்.

இம்மாத இறுதியில் டாக்டர் ஸ்ட்ரோஸ் ஹூப்பே மனைவியுடன் இலங்கைக்குப் பயணமாகிறார். வழியில் லண்டனிலும் ஏதன்சிலும் சில நாட்களைக் கழித்து விட்டு ஏப்ரல் மாதம் 7-ம்திகதியளவில் கொழும்பை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 6-ம் 7-ம் வகுப்பு பரீட்சை

உடுவில், செவ்வாய்

கல்விப் பகுதி திணைக்களத்தினால் நடாத்தப்படும் 6-ம் 7-ம் வகுப்புக்களுக்கான முதலாம் தவணைப்பரீட்சை சகல பாடசாலைகளிலும் இம்மாதம் 25-ம் திகதிநடைபெறவிருக்கிறது. தமிழ்மொழியும் இலக்கியமும், கணிதமும், ஆங்கிலமும் ஆகிய மூன்று பாடங்களும் அன்று பரீட்சிக்கப்படும்- ஏனைய பாடங்கள் அந்தந்த பாடசாலை ஆசிரியர்கள் மூலம் நடாத்தப்படும் என கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

......

## "சுதந்திரக்கட்சியுடன் இணைந்து உரிமை பெறுவோம்"

யாழ்ப்பாணம், புதன்

"தமிழர்கள் உயர் நிலைமையில் இருந்தனர் என்ற கூற்று இப்போது பழங்கதையாகிவிட்டது. எங்கள் உரிமைகளைப் பெறவோ அல்லது நிலை நாட்டவோ முடியாத நிலைமைக்கு நாங்கள் தாழ்த்தப்பட்டுள்ளோம். இதற்கு இரு காரணங்கள் உள்ளன. தமிழர்களிடையே ஒற்றுமையில்லை. தமிழர்களிடையே முறைப்படி அமைந்த சக்திவாய்ந்த இயக்கம் ஒன்றில்லை. இந்த சூழ்நிலையில் எமது கொள் பேணவும், இழந்த உரிமைகளைத் திரும்பப் பெற்று சம உரிமைகளுடன் வாழ, தமிழர்களை ஒருமைப்படுத்த ஒரு புதிய முன்னணி அமைக்க வேண்டும். தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளால் தமிழரின் அடிப்படை உரிமைகள் அபகரிக்கப்பட்டதைத் தடைசெய்ய முடியவில்லை. இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு இவ்விரு கட்சிகளும் இதுவரை எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. மாறாக பெரும்பான்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து செய்துகொள்ளப்பட்ட இந்த அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் சுமார் 100 நாடுகள்வரை கைச்சாத்திட்டிருக்கின்றன.

இந்த ஒப்பந்தம் அமுலாவதற்கு பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன், ஆகிய வல்லரசுகளுடன் 40 நாடுகள் உறுதிப்பாடு செய்தாகவேண்டும். எனவே கடந்தவாரம் லண்டனில் நடைபெற்ற வைபவத்தின்போது பிரிட்டன், சோவியத் யூனியன் அமெரிக்கா ஆகிய வல்லரசுகளும் மற்றும் நாற்பதிற்கும் அதிகமான நாடுகளும் உறுதிப்பாடு பத்திரங்களில் கைச்சாத்திட்டன. பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் வில்சன் இந்த வைபவத்தில் பேசுகையில், அணுவாயுத கட்டுப்பாட்டில் இதுவொரு மகத்தான சாதனை என்று பாராட்டினார்.

இந்த ஒப்பந்தம் அணுவாயுதங்கள் பரவுவதை தடுக்கும் நோக்கமுடையது மட்டுமன்றி, அணுசக்தியை சமாதான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவேண்டுமெனவும் வற்புறுத்துகிறது. அணுவாயுத வல்லமையற்ற ஒப்பந்த நாடுகள் எதுவும் அணுவாயுத தாக்குதல்களுக்கு இலக்கானால், அல்லது ஆக்கிரமிப்பு பயமுறுத்தலுக்கு ஆளானால், இவ்வொப்பந்தத்தின் பிரகாரம், பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா போன்ற அணுவல்லரசுகள் அந்நாட்டுக்கு உதவியளிக்கும் கடப்பாடுடையவை. இத்தகைய உறுதியை இவ்வல்லரசுகள் ஐ. நா. பாதுகாப்பு சபைக்கு அளித்துள்ளன.

## பிரிட்டனில் இசை பயில்வார்

லண்டன், மார்ச் 10

இலங்கைப் பெண்மணி ஒருவருகு லண்டன் இசைக் கல்லூரிகள் சபை உபகாரநிதிச் சலுகை வழங்கியிருக்கிறது. கொழும்பைச் சேர்ந்த செல்வி ரம்யா டீ லிவேரோ என்பவரே அவர்.

செல்வி ரம்யா லண்டனிலுள்ள இசைப் போதனுபீடத்தில் பியானோ இசை பயில்வார். இவரது பயிற்சி 3 வருடகாலம் நீடிக்கும். லண்டன் இசைக்கல்லூரிகள் சபை இவ்வாண்டு ஐந்து ஆசிரியர்களுக்கு உபகாரநிதிச் சலுகை வழங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வணக்கப் பாடலாகப் பாடப்படும்.

## செக். தூதர் யாழ். வருகிறார்

மல்லாகம், செவ்

இலங்கையிலுள்ள செக்கோஸ்லேவாக்கிய ஸ்தானிகர் இம்மாதம் 14-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார். தமது பாரியாருடன் இங்கு விஜயம் செய்யும் இவர் யாழ் நகரிலுள்ள சமய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவதுடன் இலங்கை-செக்கோஸ்லேவாக்கிய நட்புறவுச்சங்க யாழ்ப்பாணக் கிளைப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

## அபராதம்

மல்லாகம், செவ்.

சட்டவிரோதமாக வடிசாராயம் வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட ஊரெழு வாசியான வல்லிமருதன் என்பவருக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி எதிரிக்கு ரூபா 30 அபராதம் விதித்தார் சுன்னாகம் பொலிசாரால் இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## பாலைதீவு நிவாரணத்துக்கு

மல்லாகம், செவ்

நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு தர்மநிதிக்குவழங்குமாறு உத்தரவிடப்படும் பணத் தொகையை பாலைதீவு படகு விபத்து நிவாரணநிதிக்கு அனுப்பிவைக்குமாறுமல்லாகம் நீதிபதிதிரு. எஸ். ஆனந்தகுமாரசாமி நீதிமன்ற பிரதம லிகிதருக்குத் தெரிவித்துள்ளார்

## சிவராத்திரி விழா

ஊர்காவற்றுறை, செவ்

சரவணை — தேவபுரம் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் 'மகாசிவராத்திரி விழா' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நான்கு சாமமும் விசேட பூசைகள் இடம் பெற்றன.

சைவப்பிரசாரகர் திரு. ச. சிவசம்பு பண்டிதர் சோ. தியாகராசா செல்வன் மா. சிவசுப்பிரமணியம், ஆசிரியர் திரு. நா. கந்தையா, பண்டிதர் திரு. சு. சிவசம்பு ஆகியோர் உபந்நியாசம் நிகழ்த்தினர்.

சரவணை சைவ இளைஞர் மன்றத்தலைவர் திரு. வே. குணரத்தினம் நன்றி கூறினார்.

......

## சமயகுரவருக்கு பாராட்டு

ஊர்காவற்றுறை, செவ்.

பாஷையூர் பங்குக் குரவராகக் கடந்த 5 வருடங்கள் கடமையாற்றி மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்ட வண. கே. பி. சந்தியாப்பிள்ளைக்கு அவ்வூர் மக்கள் பாராட்டு விழா நடாத்திக் கௌரவித்தனர்.

சமயத் தொண்டுடன் பொதுச்சேவையிலும் இவர் ஆற்றிய பணிகள் குறித்துப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

வட்டார அங்கத்தவர் திரு. போல்ராசா, முன்னாள் அங்கத்தவர் திரு அழகையா ஆகியோர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பொதுமக்களால் சமயகுரவருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. முன்னாள் மாநகர உறுப்பினர் திரு. செபஸ்தியாம்பிள்ளை ஜே. பி. தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது.

## நன்கொடை உதவி

மல்லாகம், செவ்வாய்

ஏழாலைக் கிராமசபைத் தலைவர் திரு. க. சிவகுரு, 15-ம் வட்டார உறுப்பினர் திரு. வீ. தம்பாப்பிள்ளை ஆகியோர் தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவரும், யாழ்ப்பாண எம். பி.யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவை சந்தித்த தன்பேரில்நாச்சிமார்கோவில் ரோட், இராசஇராசேஸ்வரி ரோட், சமாதிகோவில் ரோட், முதலியார் தம்பிப்பிள்ளை ரோட் போன்றவற்றின் சீர்திருத்தத்திற்கு முறையே ரூபா 10,000, ரூபா 3500, ரூபா 3500, ரூபா 3500, புன்னாலைக்கட்டுவன் வடக்குவிளையாட்டு மைதானத்திற்குரூபா 5000 நன்கொடையாக வழங்க வாக்குறுதியளித்துள்ளார்.

......

## டெடிகம திறந்து வைப்பார்

மல்லாகம், செவ்

உத்தியோக தோரணையில் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. டெடிகம இம்மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார், இவர் செட்டித்தெருவில் அமைந்துள்ள நல்லூர் பொலிஸ் நிலையத்தைத் திறந்து வைப்பார்.

...க்கும் நல்லெண்ணத்தையும் நட்பையும் பேணிக்காக்க புதிய தூதர் பாடுபடுவார் என்று நினைக்கிறேன்'' என்றார். அவர் தொடர்ந்து பேசும்போது. ''இலங்கை

டனிலும் ஏதன்சிலும் சில நாட்களைக் கழித்து ...ட்டு ஏப்ரல் மாதம் 7-ம்திகதியளவில் கொழும்பை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மேற்கு வங்காளத்தில் புதிய கூட்டுமுன்னணி?

### மார்க்ஸ் கம். முயற்சி

புதுடில்லி. மார்ச். 10

மேற்கு வங்காளத்தில் பங்க்ளாகாங்கிரஸ் இல்லாமல் புதிய கூட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது சம்பந்தமாக மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியினர் முதல் முயற்சிமேற்கொள்ளவிருக்கின்றனர்.

இது சம்பந்தமாக மார்க்ஸிஸகம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசி திரு, தாஸ்குப்தா பங்களா காங்கிரஸ் அல்லாத எல்லாக் கட்சிகளுக்கும் கடிதம் அனுப்பியிருப்பதாகச் தெரிவித்திருக்கிறார்.

முதலமைச்சர் திரு. ஜோய் குமார் முகர்ஜி ராஜினாமாசெய்ய முடிவுசெய்திருப்பதைக் கைவிடும்படி கேட்கப்போவதில்லையென்றும் மார்க்ஸயகம் யூனிஸ்ட்கள் அறிவித்திருக்கின்றனர்.

மேற்குவங்காளத்தில் புதிதாகஅமைக்கப்படவிருக்கும் எந்த அரசிலும் கூட்டுச் சேருவதில்லையென்று திரு. ஜெகஜீவன்ராமின் தலைமையிலுள்ள காங்கிரஸ் கட்சியினர் முடிவுசெய்திருக்கின்றனர்.

## சாம்ராஜ்ய கருத்தரங்கில் இலங்கை அதிகாரி

சிங்கப்பூர், மார்ச். 10

சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்தசிரேஷ்டராஜதந்திரிகளின் கருத்தரங்கு ஒன்று நேற்று (மார்ச். 9) சிங்கப்பூரில் ஆரம்பமாகியது. இலங்கைப் பிரதிநிதியாக இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு விவகார அதிபர் திரு. ஏ. பஸ்நாயகா இக் கருத்தரங்கில் பங்குபற்றுகிறார்.

சாம்ராஜ்ய தலைமைக் காரியாலயத்தின் ஆதரவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கு மார்ச் 14ந் திகதிவரை நடைபெறும். சாம்ராஜ்யத்தின் வெளிவிவகாரக்கொள்கை, சாம்ராஜ்ய கூட்டணியின் புதிய இலட்சியங்கள் போன்ற விடயங்கள் இந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்படும். சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து நிரந்தரக் காரியதரிசிகள். வெளிவிவகார பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட உயர்தர தூதுகோஷ்டிகள் இக்கருத்தரங்கில் பங்குபற்றிவருகின்றன.

சிங்கப்பூர் அரசாங்கத்தின் வெளிவிவகார மந்திரி திரு. எஸ். ராஜரெட்னம், இந்தக் கருத்தரங்கை சிங்கப்பூரிலுள்ள மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைத்தார்.

## வேலைசெய்த வீட்டிலேயே திருட்டு

மல்லாகம், செவ்வாய்

பெற்றோரை இழந்த 14 வயதுச் சிறுவன் ஒருவருக்கு இரக்கம் காட்டி தனது வீட்டில் வேலை வழங்கிய சுன்னாகத்தைச் சேர்ந்த கே. சண்முகம் என்பவரின் வீட்டில் ரூபா 355 ரொக்கப் பணத்துடன் பேர்ஸ் ஒன்றை களவாடிக் கொண்டு வீட்டை விட்டு பிரஸ்தாப சிறுவன் மறைந்துவிட்டான். பன்விலை வாசியான வீ. உலகப்பா என்ற இச்சிறுவன் யாழ்ப்பாணத்தில் களவுபோன பணத்துடன் கைது செய்யப்பட்டான்.

சுன்னாகம் பொலிசார் இச்சிறுவன்மீது திருட்டுக் குற்றம் சுமத்தி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்ட இச்சிறுவனின் கைவிரல் அடையாளம் பதிவுசெய்ய உத்தரவிட்டு மல்லாகம் நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி தண்டனை வழங்குவதற்காக இம் மாதம் 24ம் திகதிவரை றிமாண்டில் வைத்துள்ளார்

பாடங்களும் அன்று பரீட்சிக்கப்படும். ஏனைய பாடங்கள் அந்தந்த பாடசாலை ஆசிரியர்கள் மூலம் நடாத்தப்படும் என கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

......

## கதம்பவிழா

உடுவில், செவ்வாய்

இணுவில் இசை நடனகிராமியக் கல்லூரியின் 5-வது ஆண்டான இவ்வருடத்தில் மேற்படி கல்லூரியை சேர்ந்த எட்டு மாணவிகளின் நடன அரங்கேற்றத்தையும் ஐந்து மாணவர்களுடைய மிருதங்க அரங்கேற்றத்தையும் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி இம்மாதத்தில் ஒரு கதம்ப விழாவினை உடுவில் கிராம சபை திறந்த வெளியரங்கில் நடாத்த மேற்படி கல்லூரி இயக்குனர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

......

## "இராணுவத்தை அகற்றுக"

### இ ச. கோரிக்கை

ஊர்காவற்றுறை. செவ்.

வடபகுதியில் இருந்து இராணுவத்தை வெளியேற்றி அதற்குப்பதில் விசேட பொலிஸ் படையை நிறுவவேண்டுமென அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம்ஒன்றைப் புங்குடுதீவு கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

புங்குடுதீவில் கடமையாற்ற இரு மருத்துவமாதுகள் போதாமல் இருப்பதால் மேலும் ஒரு மருத்துவ மாதை நியமிக்கவேண்டும் எனவும், தண்ணீர் விநியோகத் திட்டத்தைத் துரிதப்படுத்தி விரைவில் தண்ணீர்பெற வாய்ப்பைப் பெறவேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சி ச. தலைவர் திரு. கே. மதியாபரணம் ஜே. பி. தலைமையில் நடந்த இக்கூட்டத்தில்சோழகன் ஓடைப்பாலத்தைத் திருத்தம் செய்ய வேண்டுமென்றதீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## யானைகள் தொல்லை

உருத்திரபுரம், செவ்வாய்

உருத்திரபுரம், சிவநகர், அட்டம்பன் பகுதிகளில் வாழும் மக்கள் யானைகள் கூட்டம் கூட்டமாக வந்து வயல்களை அழித்துச்செல்வதைக்கண்டு மிகவும் பீதியடைந்துள்ளனர். யானைக் கூட்டங்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் கூடிவருவதாக தெரிகிறது.

இதற்கு இரு காரணங்கள் உள்ளன. தமிழர்களிடையே ஒற்றுமையில்லை. தமிழர்களிடையே முறைப்படி அமைந்த சக்திவாய்ந்த இயக்கம் ஒன்றில்லை. இந்த சூழ்நிலையில் எமது கொள்கைகளை வளர்க்க நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து இயங்க வேண்டும். சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து எமக்கு இதுவரை மறுக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் பெறுவேம்.''

தமிழர் சோஷலிச முன்னணி அமைக்கப்படுவதை முன்னிட்டு அமைப்பாளர் திரு. வி நாகராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு. நாகராசா மேலும் கூறியுள்ளதாவது: தமிழர் சமுதாயத்தின் நலனைப்

கப்பட்டதைத் தடைசெய்ய முடியவில்லை. இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு இவ்விரு கட்சிகளும் இதுவரை எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. மாறாக பெரும்பான்மை இனத்தவரின் நல்லெண்ணத்தை அனுவசியமாக பொசுக்கிவிட்டது. தமிழர் கட்சிகள் இரண்டும் இன்று அரசியல் கொள்கைகளுக்கே வறட்சியடைந்துள்ளன. தமிழர் சமுதாயம் எதிர்நோக்கும் இக்கட்டான நிலைமையை மாற்ற இந்த இரு கட்சிகளிடமும் தகுதியான வழிவகைகள் இல்லை. சாதிபேதம் இன்றி சகல துறைகளிலுமுள்ள தமிழர்களை ஒன்றுசேர்த்து தமிழர்களின் நன்மைக்காக இந்த முன்னணி அமைக்கப்படுகிறது.

(மல், நி.

“நியாயமான தமிழுரிமை சட்டத்துக்காக

# நீதிமன்றம் சென்று வழக்காடலாம்”

— வி. தர்மலிங்கம்

உடுவில், செவ்.

''காந்தியடிகள் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கெதிராக எவ்வாறு உப்புவரி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினாரோ அதேபோல நாமும் சிங்களச்சட்டத்தை எதிர்த்து 'ஸ்ரீ' எழுத்ஸதை ஒரு சின்னமாக வைத்து போராடினோம். எமது கடும் எதிர்ப்புதான் 1966ல் நாம் சிறைப்பட்டபோது இயற்றப்பட்ட நியாயமான தமிழுரிமைச் சட்டமாகும். இச் சட்டம் இன்று சரிவர அமுலாகாமல் இருக்கலாம் ஆனால் சட்டப் புத்தகத்தில் அவ்விதி எழுதப்பட்டுள்ளது. சந்தர்ப்பம் நேரிடின் கோடீஸ்வரன் வழக்கைப் போல இதற்கு நாம் நீதிமன்றத்தில்சென்றுபோராட முடியும்''.

தமிழ்மொழியும் பல்கலைக் கழகமும் என்ற கருத்தரங்க நிகழ்ச்சி ஒன்றில் பேசிய உடுவில் தொகுதி எம் பி: திரு. வி, தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்,

உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இக் கருத்தரங்கு உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் வரவேற்புரையுடன் உடுவில் எம். பி தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

உடுவில் எம். பி. திரு. வி, தர்மலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

எமது போராட்டத்தின் மூலம் கிடைத்த நியாயமான தமிழ்உரிமைச் சட்டப்படி இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொண்டால் அதற்கு சிங்களத்துடன் கூடிய தமிழ் மொழி பெயர்ப்பும் கிடைக்கும். ஆங்கில மொழியில் தொடர்புகொண்டால் சிங்கள மொழியிலேயே பதில் கிடைக்கும். ஆங்கிலமொழியில் தொடர்புகொண்டுவிட்டு தமிழ்மொழியில் பதிலை எதிர்பார்க்கலாமா?

பல்கலைக்கழகத்தை பொறுத்தவரையில் 1956ல் நாம் கேட்டதையே இன்றும் கேட்டுவருகிறோம். அன்றெல்லாம் திருமலையில் பல்கலைக்கழகம் அமைப்பதை இன்று விரும்பாதவர்கள் அதை எதிர்க்காமல் இருந்துவிட்டு இப்போ எதிர்ப்பதன் காரணம் புரியவில்லை. நாம் கோரும் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்ல, இந்துக்களுக்கு மட்டுமல்ல, இலங்கையின் சகல தமிழ்மக்களுக்கும் பொதுவானதாக அமைய வேண்டும்.

கூட்டத்தில் 'பல்கலை' ஆசிரியர் ம, க. அந்தனி சில்லும் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நாம் ஏன் வாழ்கின்றோம். என்ன நோக்கத்திற்காகப் பிறக்கின்றோம் என்பதை சிந்திக்காத மனிதன் இறைவனால் சபிக்கப்பட்டவனாகின்றான்.

— நபிகள் நாயகம்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம்
28-ந் திகதி (11-3-70)


## வருமுன் காக்கவேண்டும்

வந்தபின் காப்போனாக இருப்பது ஆபத்து என்பதையும் வருமுன் காப்போனாக இருக்கவேண்டிய அவசியத்தையும் சிறு வயதிலேயே பாடப்புத்தகத்தில் பலரும் படித்திருக்கிறோம். நமது தலைவர்களும் ஆட்சி மன்ற உறுப்பினர்களும் நாட்டை ஆளுபவர்களும் நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் முக்கிய பொறுப்பான பதவி வகிப்பவர்களும் இதை அறியாதவர்களல்லர்.

மதவாச்சிக்கும் வவனியாவுக்குமிடையில் சில தினங்களுக்கு முன் நடந்த ரயில் விபத்தும் சென்ற சிவராத்திரி இரவு மாத்தறையில் நடந்த எறிகுண்டு வீச்சும் நாட்டின் அமைதியையும் ஒழுங்கு, கட்டுப்பாடு, சட்டம் ஆகியவையும் மதித்து விரும்பிநடக்கும் மக்களுக்கு நிச்சயம் மகிழ்ச்சியளிக்க முடியாது,

இன, மத, துவேஷத்தைத் தூண்டிவிட்டு குறுகியவழியில் அரசியல் ஆதாயம் பெறவிரும்பும் சிலரும் அவர்களுக்கு தூண்டுதலாக இருக்கும் சில பொறுப்பற்ற பத்திரிகைகளும் நாட்டில் நாசவேலையும் விஷமத்தனங்களும் நடைபெறுவதற்குக் காரணமாக இருக்கின்றன. 'வெந்த வீட்டில் பிடுங்கியது அறுதி' என்ற முறையில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொள்ளையடிக்கத் தயாராகவிருக்கும் குண்டர்களுக்கு இது நல்ல வாய்ப்பாகவும் இருக்கிறது.

பொதுத்தேர்தல் நெருங்கிவரும் இச்சமயத்தில் வகுப்புவாதப்பிரசாரத்தில் சில அரசியல்வாதிகள் ஈடுபட்டு மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடும்போது அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த குண்டர்கள் தயாராக இருக்கிறார்கள். கடந்தகால அனுபவங்களிலிருந்து நமது நாட்டுத் தலைவர்கள் பாடம் படித்திருக்க வேண்டும். ஏனோ அந்த அனுபவங்களை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

மலேசியாவில் சென்ற பொதுத்தேர்தலின் பின் ஏற்பட்ட இனக்கலவரம் பல உயிர்களைப் பலிகொண்டது. இந்த அனுபவத்தைக் கொண்டு அங்கு வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்குத் தேர்தல் சட்டத்தில் திருத்தம்செய்யப்படவிருக்கிறது. நமது நாட்டிலும் தேர்தல் சட்டத்தில் சமீபத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டபோதிலும் வகுப்புவாதத்தைத் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம்பெறமுனையும் அரசியல் வாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான எந்தவிதமான விதிகளையும் அதில் சேர்த்துக்கொள்ளத் தவறிவிட்டனர்.

மாத்தறைச் சம்பவமும் மதவாச்சிக்கருகில் நிகழ்ந்த ரயில் விபத்தும் அரசாங்கத்தினதும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய பொறுப்பிலுள்ளவர்களினதும் இந்த நாட்டு மக்களுக்கு வழிகாட்டப் புறப்பட்டுள்ள தலைவர்களினதும் சிந்தனையைத் தூண்ட வேண்டும்.

அரசியல் தலைவர்களும் பத்திரிகைகளும் பொறுப்புடன் நடந்துகொண்டால் தேர்தல் அமைதியாக நடைபெறுவதுடன் நாட்டின் அமைதியும் பாதுகாக்கப்படும். மக்களும் பொறுப்புடன் நடந்து ஜனநாயகத்தையும் பாதுகாப்பார்கள்.

நல்ல ஆட்சியைத் தெரிவு செய்வது மக்களின் பொறுப்பும் கடமையும்தான் என்றாலும் நல்ல அபேட்சகர்களைத் தெரிவுசெய்வதில் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் அதிக பொறுப்பும் கடமையுமிருக்கிறது. இதில்தான் நாட்டின் அமைதியும் முன்னேற்றமும் பெரிதும் தங்கியுள்ளது.

சமயம் பற்றி ஒன்றும் தெரியாது; ஆனால்-

# சிவாஜி, எம். ஜி. ஆர். பற்றிய முழுவிபரமும் கூறுவார்கள்

## இக்கால மாணவர் நிலை குறித்து டாக்டர் கவலை

யாழ்ப்பாணம், புதன்

சிவாஜிக்கு பேரப்பிள்ளையுண்டா, எம். ஜி. ஆருக்கு எத்தனை மனைவிகள் இப்படி கேட்டால் இக்கால மாணவர்கள் அவர்தம் வரலாறு முழுவதையுமே கூறிவிடுவார்கள். ஆனால் தம்மதத்தைப்பற்றி ஏதாவது கேள்வி கேட்டால் ஒன்றும் தெரியாமல் விழிப்பார்கள் இந்த நிலைமைமாறவேண்டும்.

இவ்வாறு டாக்டர் எஸ். சண்முகலிங்கம் சாந்தையர் மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பதினைந்தாவது விழாவில் பேசுகையில் கூறினார். மேற்படி கழகத்தின் ஆண்டு விழாவும் சிவராத்திரிவிழாவும் அண்மையில் நடைபெற்றபோது டாக்டர் சண்முகலிங்கம் தலைமைவகித்தார். பலர் பேசினார்கள் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. டாக்டர் சண்முகலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"எனக்குத் தெரிந்தவரையில் இக்கோவிலில் நாயன்மார் குருபூசைகளும், மாணவர்களுக்கு சமய அறிவை வளர்ப்பதற்காக சைவசமய அறிவுப்போட்டியும், கட்டுரைப்போட்டியும் வைத்து ஊக்கம் அளிக்கின்றார்கள் அதுமட்டுமல்லாமல் கிழமைக்கொருதடவை சமய பாட வகுப்பும் இக்கோவிலில் நடக்கின்றது இதன் மூலம் இக்கழகத்தினர் சைவ சமயத்தை மேலும் வளரச்செய்கின்றார்கள். இக்கால மாணவ மாணவியரிடம் சைவசமயத்தைப்பற்றிஏதாவது வினவினால் ஒன்றும் கூறாது அதைப்பற்றிச் சிந்தியாதும் விட்டுவிடுவார்கள். ஆனால் எம். ஜி. ஆருக்கு எத்தனை மனைவிமார், சிவாஜிக்குப்பேரப்பிள்ளை பிறந்துவிட்டதா எனக்கேட்டால் அவர்களின் வாழ்க்கை வரலாறு முழுவதும் கூறிவிடுவார்கள். மாணவர்கள் இவைகளில் ஈடுபடாது சமயத் தொண்டுகள் செய்வதோடு சமயத்தை நன்றாக கற்கவும்வேண்டும்"

திருமதி சோ. சண்முகலிங்கம் கட்டுரைப் போட்டியிலும், சைவசமய அறிவுப் போட்டியிலும் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார்.

திரு. சோ. தவலிங்கம் குழுவினர் 'பட்டினத் தடிகள்' என்னும் பொருள்பற்றி வில்லிசை நிகழ்த்தினார்கள்.

... ... ...

### இறுதி மோதல்

உடுப்பிட்டி, செவ்வாய்

இமையாணன் அறிவாலயம் நடாத்திய ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் வதிரி டயமன்ட் கோஷ்டிக்கும் கரவெட்டி கொமற் கோஷ்டிக்கும் இம்மாதம் 15-ந் திகதி நடைபெறும் என்று அறிவாலயம் கழகத்தின் பொறுப்பாளர்கள் அறிவிக்கிறார்கள்.

## "இனக்கலவரம் ஏற்பட கூட்டணியே காரணமாம்"

### பிரதமர் கூறுகிறார்

கிரிநெத்தியானே, செவ்.

'கூட்டணி அரசாங்கம் இனக்கலவரத்தை உண்டு பண்ணும் வகையில் நடந்து கொண்டதோடு நாட்டின் பல இன மக்களிடையே வேறுபாடுகாட்டி நடந்ததாலேயே அபிவிருத்தி வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. எனவே அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டமைக்கு கூட்டணியே [...] பித்துள்ள திட்டங்களெல்லாம் பூரணமாகச் செயல்பட மக்கள் ஒத்துழைக்க வேண்டும். மறுபடியும் எங்களை ஆட்சிபீடத்தில்அமர்த்தினால் நாட்டில் தலைதூக்கி நிற்கும் பிரச்னைகள் யாவற்றையும் தீர்த்துவிடுவோம் எனப் பிரதமர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய வர்த்தக அமைச்[...]

### புதிய தபாற் கந்தோர்

மூதூர், புதன்

கடந்த 35 வருடகாலமாக வாடகைஇடம்ஒன்றில் இயங்கி வந்த தபாற் கந்தோர் சௌகரியமான கட்டடம் இன்றி பெரிதும் அவல நிலையில் இருந்தது. இப்போது நிரந்தரமானதும் வசதிகள் உடையதுமான தபாற் கட்டடம் ஒன்றை அமைக்க மூதூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனுப் முகம்மது அலி எடுத்துக் கொண்ட முயற்சியின் பேரில் சகல அரசாங்க காரியாலயங்களுக்கும் மத்தியில் பிரதான வீதியில் புதிய தபாற்கந்தோர் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை கௌரவ அமைச்சர் திரு. மன்டேகு ஜயவிக்கிரம திறந்து வைப்பார்.

### 'கலையை வணங்குக'

உடுப்பிட்டி, செவ்.

'தமிழினத்தின் பண்பாட்டிற்கும், கலாச்சாரத்திற்கும் ஒப்பவே கலை தோன்றியது. மக்கள் மனத்தை நல்வழியில் செலுத்துவது கலையே. எவ்வளவு பக்தி சிரத்தையுடன் இறைவனைத் தொழுகின்றோமோ அது போல் கலையையும் மதித்து வணங்க வேண்டும்' என உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டியில் உடுநகர் உதய சூரியன் கலாமன்றத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

திரு. சிவரத்தினம் தலைமையில் இத் திறப்புவிழா நடைபெற்றது.

### 'வீதியை அகலிக்கவும்'

ஊர்காவற்றுறை, செ[...] சன நெருக்கம் நிறை[...] விவசாயிகளின் போக்குவரத்திற்கு இன்றியமையாத வீதியாக அமைந்துள்ள சரவணை- சுடுவில் வீதியை அகலிக்குமாறு வடப[...]தி அரசாங்க அதிபரைக் [...]

### ஆண்டுவிழா கொண்டாடினர்

அல்லைப்பிட்டி, செவ்வாய்

புங்குடுதீவு வல்லன் ஸ்ரீ சண்முகநாத வித்தியாசாலை பழைய மாணவர்கள் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவுவிழாவும் மகா சிவராத்திரி விழாவும் மேற்படி வித்தியாசாலை திறந்த வெளியரங்கில் தலைமையாசிரியர் திரு. மு. நடராசா தலைமையில் கொண்டாடப்பட்டது. அன்று விளையாட்டுப் போட்டிகள் வல்லன் திகழி விளையாட்டரங்கில் நடைபெற்றன. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய அதிபர் திரு. ஆ. இராசையா ஆகியோர் கலந்துகொண்டனர். விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி நவரத்தினம் பரிசில்கள் வழங்கினார். இவ் விழாவில் ஊரதீவு இளம் தமிழர் மன்றத்தினரின் "வள்ளி திருமணம்" என்னும் வில்லிசை நிகழ்ச்சியும், ஆனைக்கோட்டை சித்திர கலா நாடக மன்றத்தினரின் கூடப்பிறந்த குற்றம், கைலாயம் போகும் கைலாசம் என்னும் நாடகங்களும் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. மறுநாள் இலுப்பண்டை நாச்சிமார் கோவிலில் விசேட பூசைகளும், பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

### காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளை

உடுப்பிட்டி, செவ்வாய்

"வாலிபர்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் பல திட்டங்களை தமிழ்க்காங்கிரஸ் செயற்படுத்தி வருகின்றது" என்று முன்னாள் பருத்தித்துறைநகர சபைத் தலைவர் திரு. என். நடராசா புலோலி மேற்கில் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார். புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

போஷகர்: திரு. என். நடராசா, தலைவர்: திரு ந. தேவராசா, காரியதரிசி: திரு. பா. ஆறுமுகநாதன், உபதலைவர்: திரு. இ. ஸ்ரீரங்கநாதன், உபகாரியதரிசி: திரு. செ. பாலன், தனாதிகாரி: திரு. இ. ஸ்ரீதரன், பொறுப்பாளர்: திரு. இ. ரகுபதிராசா.

### கதம்ப விழா

திருமலைச் செய்திகள்

# ரூ. 2 லட்சம் செலவில் நவீன நூலகம்

(நமது நிருபர்)

திருக்கோணமலை, செவ்.

இரண்டுலட்சம் ரூபா செலவில் திருமலையில் நவீன நூலகமொன்று நிறுவப்படவிருக்கின்றது. இதற்குரிய சகல நடவடிக்கைகளையும் நகர சபை கவனித்து வருகின்றது.

1967-ம் ஆண்டு பிரதமர் டட்லி சேனநாயக்காவினால் அத்திபாரக்கல் நாட்டப்பட்ட இந் நூலகத்தை விரைவில் நிறுவும்படி நகர சபை கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசாங்கம் ரூபா 2,00,000 ஒதுக்கியுள்ளது.

உலக நூலகப் பிரதிநிதியான திருமதி இவான்ஸ், இக் கட்டிடம் சம்பந்தமாக எஞ்சினியருடன் ஆலோசனை நடத்தி வருகின்றார்.

0 0 0

### அசைஸ் விசாரணைகள்

திருமலையில் உயர் நீதி மன்ற விசாரணை இம்மாதம் 31-ந் திகதி ஆரம்பமாகின்றது. அப்போது பாலகன் அலிகான் கொலைவழக்கு மற்றும் ஆறு வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

0 0 0

### தமிழரசுக் கிளைகள்

திருக்கோணமலை அரசடி தமிழரசுவாலிப முன்னணிக் கிளையொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் இரா-பாலசிங்கம் செயலாளர்: சிவஜெகநாதன் பொருளாளர்: பி. சந்திரகுமார், உபதலைவர்: வி. சந்திரசேகரம். மூன்றுபேர் கொண்ட நிர்வாகக் குழுவும்தெரிவுசெய்யப்பட்டது.

பத்தாம்குறிச்சியிலும் தமிழரசு வாலிப முன்னணிக் கிளையொன்று அமைக்கப்பட்டது. இக்கிளையின் அலுவலகத் திறப்புவிழா விரைவில் நடைபெறும்.

### டெலிபோன் கஷ்டம்

திருக்கோணமலை தொலைபேசி இணைப்பு நிலையம், சரியாக இயங்கவில்லையாம் இதனால் வெளியிடங்களுக்குத் தொலைபேசிமூலம் தொடர்பு வைக்கமுடியால் இருக்கின்றதாம்.

மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களுக்கு திருகோணமலையில் இருந்து துப்புரவாகவே தொலைபேசித் தொடர்புவைக்க முடியவில்லையென்றும், அடிக்கடி இணைப்பு நிலையம் பழுதடைந்து வருவதாகவும் நீண்டகாலமாக இருந்துவரும் இத் தொந்தரவு நீக்கப்படவில்லையென்றும் கூறப்படுகின்றது.

0 0 0

### கலைவட்டச் செயற்காட்சி

மூதூர் மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 13, 14-ந் திகதிகளில் கலைவட்டச் செயற்காட்சி நடைபெறவிருக்கிறது.

0 0 0

### ஒரு பசுவின் கதை

வீட்டில் கட்டப்பட்டிருந்த பசுமாட்டைக் காணவில்லையென்றுதேடிச்சென்றபோது ஓர் இடத்தில் பசுமாட்டின் தலையிருந்ததாம். ஆனால் முண்டத்தைக்காணவில்லையாம்.

வீட்டில் கட்டியிருந்த பசுமாட்டை மாடுபிடிப்போர் நைலோன்கயிற்றினால் கட்டி இழுத்துக்கொண்டு போனபோது நைலோன் கயிறு இறுகி மாடு இறந்துவிட்டதாகவும் இறந்த மாட்டை அதிகாரிகளிடம் ஒப்படைக்க முடியாத காரணத்தினால் மாடுபிடிப்போர் இரவோடு இரவாகக் கடத்தி புதைகுழி வெட்டித்தாட்டுவிட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. இதுபற்றி நகர சபைத் தலைவரிடம் முறையிடப்பட்டுள்ளது.

## "திருமலையில் நிறுவ சிபார்சு செய்யவேண்டும்"

திருக்கோணமலை, செவ்

"சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து [...] பல்கலைக்கழகம் நிறுவுவதற்கென வாங்கி விடப்பட்ட காணி உப்புவெளி [...]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

குண்டர்கள் தயாராக இருக்கிருர்கள் கடந்தகால அனுபவங்களிலிருந்து நமது நாட்டுத் தலைவர்கள் பாடம் படித்திருக்க வேண்டும்.

மருக்கிறது. இதிலேதான் நாட்டின் அமைதியும் முன்னேற்றமும் பெரிதும் தங்கியுள்ளது.

# கருகிய மொட்டுக்கள்

— வேலணையூர் மலரவன்

(நேற்றைய தொடர்ச்சி)

**சின்னத்துரை ஞானசேகரம்**

இளஞ்சோதரர்கள் ஒற்றுமையை இலககியத்தில் காணுகின்ருேம். இராம இலக்குமணராய் நிஜவாழ்க்கையிலும் இச்சோதரரைக் கண்டார். வேலணையூர் மக்கள் பாலைதீவுத் திருநாள் காணபுறப்பட்டன இக்காளை இரண்டும். பாலைதீவு செல்கையிலே இப்படியொரு பயங்கரத்தைஎதிர்பார்த்தா சென்ருர்கள் படகு கவிழ்ந்தது. அவர்கள் மனமும் உடைந்தது. நீச்சல் தெரியாது தத்தளித்த தம்பியை தன் தோளிலே அணைத்துக்கொண்டு அலைகடலை எதிர்த்து எதிர்நீச்சல்போட்டான் தமையன். தம்பி உயிர் கவர்வதற்கு தண்ணீர் அலையுருவில் வந்த காலன் விடுவானு? சகோதர பாசத்தை விலக்கிடவே காலன் தன் பாசத்தைவீசிட்டான். பறித்துவிட்டான் தம்பி உயிர் கடுந்தூரம் நீந்தியதால் ஏற்பட்ட களைப்பினிலே இடர்ப்பட்ட இளைப்பினிலே இளையோனைக் கைவிட்டான் காலனும் அவனுயிரைக் குடித்திட்டான்.

**கணபதிப்பிள்ளை பாலன்**

பெயரோ பாலன்தான் உருவிலும் பாலனேதான். பஞ்சபாண்டவர்போல் ஐவர் உடன்பிறந்தோர் மஞ்சமதன் மீது கொஞ்சிவிளையாடும் பிஞ்சுப் பாலகர்கள் மூவர். ஆருயிர் அன்னை, அன்பான சோதரர்கள் அனைவரையும் விட்டுவிட்டு அந்தோனியின் விழாக்காண ஆசையுடன் புறப்பட்டான் ஆசை நிரம்பிவிட்டால் அனர்த்தங்கள் விளையுமென்று ஆன்ருேர் உரைத்திடுவர். ஆன்ருேர் வாக்கு அழியா வாக்கன்ருே. அதனுல்தான் அவனுயிரும் அஸ்தமன மாயிற்ருே.

**அந்தோனி மகேந்திரன்**

அன்பான பெற்ருேர்க்கு ஆசையாய்ஒருமகன் அவனே முதல் மகன், தலைமகன், தாய்க்கு உயிராய் தங்கைக்கு ஒளியாய், தம்பிக்கு வழியாய் நின்ற அவனிடத்தே, மமதையில்லை, மனமயக்கமில்லை, மாருக காட்சிக்கு எளியன் கடுஞ்சொல் அற்ருேன் மாட்சிமை மிகுந்த மகேந்திரன் பெயரால், தேனுற்றில் குளிக்கப்போய் திசைமாறிப் போனதைப் போல் அவனுடலைப் பெறச்சென்று அவன்உயிரை இழந்திட்டான்.

**சரவணமுத்து தேவராஜா**

கட்டானமேனி. முத்தான கதைகள் மட்டான வார்த்தைகளால் அவன் வாயில் சொட்டாக வெளிவடும் கருகிய உருவந்தான் ஆனுல் கட்டழகில் அவனெருவன் உருக்கமான பார்வை அது எம்உள்ளத்தோடு நெருக்கமாகப் பழகிடும் கல கலவென்ற பேச்சு. அது உடனிருப்போரை எந்நேரமும் சல சல வென்று வைத்திருக்கும் பண்பான உள்ளம். அது மற்ருேருடன் அன்பாகப் பழகிடும், இதனுல் அவன் மீதுமோகங்கொண்டோஎன்னவோ அலையரசி இன்னும் அவனுடலை வெளியே ஒதுக்கவில்லை. மாருத காதலால் அவனுடலைத் தன்னகத்தே சிராகக் கரைத்துக்கொண்டாள்.

.........

மாந்தைப்பிரிவில்

## மென்பந்து சுற்றுப்போட்டி நடத்த முயற்சி

முசலி, செவ்வாய்

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த மாந்தைக்காரியாதிகாரிபிரிவில்முதல்முறையாக ஒரு மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை மாந்தைக் காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. நெவில் தம்பிராஜா தொடக்கி வைத்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றி பெறும் கழகத்துக்கு நெடுங்கண்டல் சனசமூக நிலைய வெற்றிக்கிண்ணம் பரிசளிக்கப்படும். போட்டியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு மாந்தைக்காரியாதிகாரி முயற்சி செய்து வருகின்ருர்

பல இன மக்களிடையே வேறுபாடுகாட்டி நடந்ததாலேயே அபிவிருத்தி வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. எனவே அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டமைக்கு கூட்டணியே காரணம். ஆனுல் தேசிய அரசாங்கம் இன மத வேறுபாடற்ற முறையில் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பயனடையுமாறு சேவை செய்ததால் நாட்டில் ஒற்றுமையும் அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளன.'

வென்னப்புவவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய பிரதமர் டட்லி சேனநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேசிய அரசாங்கம் திட்டமிட்டுச்செயல்படுத்த ஆரம்பி[illegible] நாட்டில் தலைதூக்கி நிற்கு[illegible] பிரச்னைகள் யாவற்றையும் தீர்த்துவிடுவோம் எனப் பிரதமர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்

இக்[illegible]ட்டத்தில் உரையாற்[illegible]ய வர்த்தக அமைச்சர் திரு. ஹியூ பெர்ணண்டோ பேசுகையில், இன்று நாட்டின் பெரும் பிரச்னையான வேலையில்லாப் பிரச்னைக்கு முன்னைய அரசாங்கமே காரணமெனக் கூறினுர்.

கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன, வென்னப்புவ ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. ஸஸ்ருஸ் பெரேரா உட்படப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

## "ஐ. தே. கட்சியை இலகுவில் தோற்கடிக்க முடியாது

— சிறிமா

அத்தனகலை, செவ்வாய்

'ஐக்கிய தேசியக்கட்சியில் அதிக மக்கள் வெறுப்புற்றுள்ள போதும் ஐ. தே. கட்சியை இலகுவில் தோல்வியடைச் செய்துவிடலாம் என நாம் நினைக்கக்கூடாது'

வியாங்கொடையில் நடைபெற்ற பிரசாரக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில், கொழும்பு மாநகர தேர்தலின் போது எங்களுக்கும் பொலிசார் தகுந்த பாதுகாப்பளிக்கவில்லை. ஆதலால் எங்களுக்கு நாங்களே பாதுகாப்பபைத் தேடிக்கொள்ளவேண்டும். ஜூன் மாதம் பொதுத்தேர்தல் இடம்பெறும் கூட்டணி சார்பாக 138 அபேட்சகர்கள் நிறுத்தப்படுவார்கள். இதில் 75 பேர் நிச்சயமாக வெற்றிபெறுவார்கள். ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் பலர் கூட்டணியைச் சேர்ந்துள்ளனர். அவர்கள் எல்லோரையும் அபேட்சகர்களாக நிறுததுவது கஷ்டமாகவிருக்கிறது.

கடந்த தடவைபோன்று 40 ஸ்தானங்களை கூட்டணி பெறக்கூடாது. பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்று இந்த முறை அரசாங்கத்தை அமைக்கவேண்டும் எனக் கூறினுர்.

## 'தேசிய ஒற்றுமையே அரசாங்கத்தின்குறிக்கோள்'

மஸ்கேலியா, செவ்வாய்

'நாட்டில் வாழும் எல்லா இனத்தவரிடையேயும் ஒற்றுமை நிலவவேண்டுமென்பதே எமதரசாங்கத்தின் நோக்கமாகும். இதற்காகவே தான் தேசிய அரசாங்கமே அமைக்கப்பட்டது.' இன, மத, கட்சி வேறுபாடற்ற கொள்கையை எந்த ஒரு நாடு கடைப்பிடிக்கிறதோ அதுவே சிறந்த நாடாக விளங்கும்,

உள்ளூராட்சியமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தலைவாக்கொல்லையில் தண்ணீர் விநியோக அபிவிருத்தி திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில், தேசிய அரசாங்கத்தின் உயர்ந்தலட்சியத்திற்கு எதிர்கட்சியினர் மாசு கற்பிக்கின்றனர். மக்கள் அவர்களின் வீணுன பேச்சுகளில் கவனம் செலுத்தி திரும்பவும் பாதாளத்தில் விழ முயற்சிக்கக்கூடாது. 9 வருடங்களாக ஆட்சியிலிருந்த எதிர்க்கட்சியினர் என்னத்தைச் சாதித்தார்கள். அவர்களின் சேவையோடு எமது தேசிய அரசாங்கத்தின் சேவையை ஒப்பிட்டுப்பார்த்தால் எமது அரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டங்களும். நாட்டின் முன்னேற்றத்திற்குஎடுத்துக்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளும் எமது அரசாலகத்தின் முன்னேற்றத்தைத் தெளிவாகக் காட்டுவதாகவுள்ளன' எனத் தெரிவித்தார்.

[illegible] சன நெருக்கம் நிறை[illegible] விவசாயிகளின் போக்குவரத்திற்கு இன்றியமையாத வீதியாக அமைந்துள்ள சரவணை - சுருவில் வீதியை அகலிக்குமாறு வடப[illegible] அரசாங்க அதிபரைக் [illegible]டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை சரவணை கிராம முன்னேற்றச் சங்கம் நிறைவேற்றியுள்ளது

சோளாவத்தை, கரப்பியன், தலைகாட்டி, பள்ளம்புலம் குறிச்சிகளில் வாழும் இளைஞர்களின் வேலையில்லாக்கஷ்டத்தைதப்போக்க அப்பகுதி மக்களுக்கென நெசவுநிலையம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும் எனவும் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழித்துவருவதால் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பாலைதீவு பலிகொண்ட சிவா

'சிவா, சிவா' என்று எல்லோராலுஞ் செல்வமாக அழைககப்படும் செல்வன் கார்த்திகேசு - சிவராசா என்பவரும் பாலைதீவுக் கடலுக்குப் பலிகொள்ளப்பட்டவராவார். அவரின் சடலத்தை எப்படியும் ஒருமுறை பார்த்துத் தமது சோகத்துயரைப் போக்க வேண்டும் என்று துடிதுடித்த பெற்ருேரும் நண்பர்களும் அவரைத் தேடும் முயற்சியில் தளராது ஈடுபட்டனர். அரசாங்கத்திடம் முறையிட்டனர். சுங்கப்பகுதியினரும் பொலிஸ் பகுதியினரும் உதவி கொடுத்தனர். அவர்களது உதவியுடன் தமது சொந்த முயற்சியால் ஆழ்கடலெங்கும் அழுதழுது அலைந்தலைந்து தேடினர் உருவம் அதோ தெரிகிறது, இதோ தெரிகிறது. என்று எங்குந் தேடினர். நான்கு நாள்வரை தேடினர் சிவா தென்படவேயில்லை வேறு உடல்களே இவர்களால் மீட்கப்பட்டது. இன்னும் ஒரு நாள் தேடுவோம் என்ற துணிவுகொண்டு தளராநெஞ்சொடுஐந்தாம் நாளும் தேடினர். முயற்சி அவம் போகவில்லை. இராமேஸ்வரக் கடலில் எதிர் நீச்சல் நீந்திக்கொண்டிருந்தார்சிவா ஆனுல் அந்த நீச்சல் ஆவியற்ற நீச்சல்தான். இருந்தாலும் அவருடல் ஐந்தாம் நாள் யாழ்ப்பாணம் கோம்பையன் மயானததில் நீருகி மீண்டும் கடலில் சங்கமமாகியது.

— நண்பன்

ஸ்ரீரங்கநாதன், உபகாரியதரிசி: திரு. செ. பாலன், தனுதிகாரி: திரு. இ. ஸ்ரீதரன், பொறுப்பாளர்: திரு. இ. ரகுபதிராசா.

— —

## கதம்ப விழா

பருத்தித்துறை, செவ்.

இம்மாதம் 23-ம்திகதி மாலை வடமராட்சி ஆசிரியர் சங்கம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்கல்லூரியில் நடாத்தவிருக்கும் கலை, கதம்ப விழாவில் வடமராட்சிப்பகுதியிலுள்ள பலபாடசாலைகள் கலந்து கொள்ள விருக்கின்றன. நாடகம், நடனம், இசை வாத்திய இசை ஆகிய நிகழ்ச்சிகள் இவ்விழாவில்இடம் பெறவிருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு துறை நிகழ்ச்சியிலும் முதல் மூன்று இடம்பெறும் பாடசாலைகளுக்கும் பரிசில்கள்வழங்கப்படுவதாகத்தெரிகிறது.

— —

## வட்டு எம்.பி. பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

சுன்னுகம் பட்டின சபை ஆய்வுக்குழுவில் திரு. அமிர்தலிங்கம் எம். பி. பேசுகையில் "1948-ம், 1956-ம் ஆண்டுகளுக்கிடையே கல்லோயா, அல்லை, கந்தளாய் குடியேற்றத்திட்டங்கள் நடத்தி முடிக்கப்பட்டன. 1956-ம்ஆண்டுக்குப் பின் அல்லை, கந்தளாய், கல்லோயாவில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் நடைபெறவில்லை" எனத் தெரிவித்தார். (மல். நிரு)

— —

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன்

அயல் நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து மலாயா திரும்பும் ஸ்ரீ மத்சுவாமி பிரணவானந்தசரஸ்வதி யாழ்ப்பாணம் மலாயா இலங்கையர் சங்க மண்டபத்தில் இம்மாதம் 13-ம்திகதி காலை 10 மணிக்கு "வேற்று நாடுகளில்யோக மார்க்கம்" என்ற பொருள் பற்றி உரையாற்றுவார்.

——

## லெனின் பரிசு

கோட்டை, செவ்

லெனின் நூற்ருண்டு ஜெயந்தியை ஒட்டி ஒரு போட்டி ஓவியக்கலைக் கண்காட்சி லங்கா சோவியத் நட்புறவுச் சங்கத்தால் ஏப்ரல் மாதம் 17-ம் திகதியிலிருந்து 22-ம் திகதிவரை நடத்தப்படும்.

லெனின் வாழ்க்கை பற்றி அல்லது லெனின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து வரையப்படும் சிறந்த ஓவியத்துக்கு முதற் பரிசாக சோவியத ரஷ்யாவுக்கு போய்வர இலவச பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

## [illegible] சிபார்சு செய்யவேண்டும்"

திருக்கோணமலை, செவ்

"சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கும் திருக்கோணமலையில் பல்கலைக் கழகத்தை நிறுவுங்கள். நிறுவப் போகும் பல்கலைக்கழகம் பொதுப்பல்கலைக் கழகமாக நிறுவப்படும் என்று கூறும் உயர் கல்விச்சபை பெதுவான இடமாக இருக்கும் திருக்கோணமலையில் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு சிபார்சு செய்யவேண்டும் என வழக்கறிஞர் ஓ. எல். எம். இஸ்மயிலை தலைவராகக் கொண்டஇயக்கம் உயர்கல்விச் சபையின் முன்சாட்சியமளித்த போது வலியுறுத்தியது.

சகலவசதிகளாலும் மேம்பட்டு விளங்கும் திருக்கோணமலையில் பல்கலைக் கழகம் நிறுவப்போவதால் யாழ்ப்பாண மக்களோ அன்றி மட்டுநகர் மக்களோ பாதிக்கப்படமாட்டார்கள். 59ம் ஆண்டு இங்கு பல்கலைக் கழகத்துக்கென அடிக்கல் நாட்டிய போது எதிர்ப்புத் தெரிவிக்காத வட மாகாணத்தைச் சேர்ந்த சில அரசியல் வாதிகள் இன்று எதிர்ப்புத் தெரிவிப்பது வருந்தத் தக்கது.

பல்கலைக்கழகம் நிறுவுவதற்கென வாங்கி விடப்பட்ட காணி உப்புவெளியில் 87 ஏக்கரும் துறைமுகத்துக்கு முன்பாக 5ஏக்கரும் இப்பொழுதும்இருக்கின்றது அரசாங்கம் விரும்பினுல் சீனன்வாடி, டொக்யாட் போன்றஇடங்களில் அரசாங்கக் கட்டடங்களை பல்கலைக்கழகத்துக்காகக் கொடுத்துதவலாம்.

திருமலை அபிவிருத்திச் சங்கம் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

"திருக்கோணமலைமுக்கிய ஒரு கேந்திர இடமாக இருக்கின்றது. பல்கலைக்கழகம் நிறுவுவதற்கென பல ஏக்கர் காணி இருக்கின்றது. அதுமட்டுமன்றி அக்காணிக்கருகில் அரசாங்க பாமும், அதுக்கருகில் குளமும் இருக்கின்றது. சீனன்வாடியில் ஆகாய விமானப் படையினர் பாவித்த மூன்று மாடிக்கட்டடத்தில் சுமார் 3,000 அறைகள் பாவிக்கப் படாமல் இருக்கின்றன. சகல இனத்தவரும் சமமாகவாழும் திருக்கோணமலையில் பல்கலைக்கழகம் நிறுவவேண்டியது மிக முக்கியம்"

## 'ஊர்கள் தோறும் ஆலயம் அமைப்போம்'

யாழ்ப்பாணம், புதன்

"பண்டைக் காலத்தில் எமது சைவசமயம் சீருஞ் சிறப்பும்பெற்றுத்திகழ்ந்தது செல்வரும் மன்னரும் ஊர்கள் தோறும் ஆலயங்களை அமைத்துப் பேணிவந்தனர் அன்னியராட்சி நமது மண்ணிலே அடியெடுத்து வைத்த பின்னர் ஆலயங்களும், வழிபாடும், சமய ஒழுக்கங்களும் சிதைவுற்றன. இக்காலம் சைவத்தின் வரலாற்றிலே ஒரு வீழ்ச்சியான காலமாகும். இவ்வீழ்ச்சியிலிருந்து சைவம் மீண்டும் எழுந்து வளரத் தொடங்குகின்றது. இவ்வளர்ச்சியை நாட்டின் எல்லாப் பகுதிகளும் பெற வேண்டும். இவ்விதஞ் சைவத்தை வளர்க்கும் பொறுப்பு இன்று பொதுமக்களையே சார்ந்துள்ளது. அழிந்த ஆலயங்களைப் புனருத்தாரணஞ் செய்யவும் ஆலயமில்லாத ஊர்களிற் புதிய ஆலயங்களை அமைக்கவும் அவற்றின் மூலம் சமயத்தை வளர்க்கவும் மக்கள் ஆர்வத்துடன் முயலவேண்டும்"

இவ்வாறு வவனிக்குளச் சிவாலயத்தில் நடைபெற்ற மகாசிவராத்திரி விழாவில் துணுக்காய்க் காரியாதிகாரி திரு. த. மார்க்கண்டு பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:-

இவ்விழா நடைபெறும் இவ்வவனிக்குளச் சிவாலயம் மிகவும் தொன்மையுஞ் சிறப்பும் வாய்ந்தது திருக்கேதீச்சரம் இன்று வளர்ந்து வருவதுபோல இத்தலமும் வளர்ந்து சிறந்து விளங்க வேண்டும்இத்திருத்தலத்தைமீண்டும் திருத்தி அமைப்பதற்குச் சைவமககளாகிய நாம் ஒவ்வொருவரும் முன்வந்து உழைகக வேண்டும்.

## 1-ம் தர அதிபராக நியமனம்

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. ஈ. கே. சண்முகநாதன் முதலாம்தர அதிபராக பொதுச் சேவைக் கமிஷனுல் நியமனம் பெற்றுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரா யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org